திராவிடநாடு

16—9—62 | வார வெளியீடு | விலை 16 காசு

அறப் புரட்சி

—கவிஞர் "சுரா"—

—★—

உள்ளத்திலேறிய உணர்வும்; உடல்
உதிரத்திலூறிய உரிமையும்; மக்கள்
வெள்ளத்தால் பொங்கிவிடும்; எங்கும்
புரட்சியே ஓங்கி விடும்!

மருட்சியால் அரசு வாடும்; உதிரி
திரட்சியால் எதிர்க்கக்கூடும்; கடல்
பெயர்ச்சியில் உலகாவாழும்?; அறப்
புரட்சியால் கொடுமை ஒடும்!

கேடாட்சிக்கு அதிகாரம் கைத்தடி; ஆளும்
கட்சியை அகற்றினல் வெறுந்தடி; இன
மீட்சிக்குக் கொள்கையே உயிர்நாடி; திராவிடப்
புரட்சிக்குக் கழகமே வழிகாட்டி!

விடுத்தானே? | பிடித்தானே?

ந. இறைவன், பி. ஏ.

அவள் பூப்படையாப் பருவத்துப் பிஞ்சாக இருந்தபோதே, அவளை நெஞ்சத்துக் காப்பிலிட்டுக் காத்திருந்தான் காளை அவன். பூத்த புது மலரானாள் பாவை. பூத்தோண்டும் வண்டானான் காளை. பார்த்திருந்தவளும் காத்திருந்தவனும் மாலைமாற்றிக் கொண்டனர். மனையறம் புகுந்தனர். காளையின் மனதில் நேரத்திற்கொரு ஆசை, நிமிடத்திற்கு ஒரு கற்பனை; குடத்தேன் என்பான். இல்லை! இல்லை! குடித்தால் முடிந்து விடுவதாயிற்றே குடத்தேன்! குடித்தால் முடியாத இடைத்தேன் உடையாளைக் குடத்தேன் என்றேனே! நானோர் கொடும்பாவி! என்று தன்னைத் தானே நொந்து கொள்வான். கண்மூடிப் படுத்திருப்பான் படுக்கையில்! கிடைத்திருக்கும் ஒரு உவமை. கிடைத்த உவமைதனை எடுத்து வந்து தொடுக்க வருவான் கவிதை; தோகைக்கு உவமையாக. அவளழகைக் கவிதையிலே அடுக்கி அடுக்கி உவமைதனை எடுத்துத் தொடுக்க வரும்போது, இல்லை இல்லை! நானந்தத் தோகைக்கு உவமையில்லை எனச் சொல்லி எடுக்குமே ஓட்டம்! முடிப்பின்றி முடியும் அவன் கவிதை! எந்த உவமையைத் தொடுக்க நினைத்தாலும் அந்த உவமைகள் எடுப்பற்றுப் போகும் அவளழகுத் தொகுப்பின் முன்னால்!

முதல் நாளும் வந்தது. அறைக் கதவும் திறந்தது. பாவையின் மனக்கதவும் திறந்தது. துகிற் கதவு அன்றிப் பிற துணைக் கதவு அத்தனையும் திறந்தன. அகிற் புகை போன்ற ஆடையை முகில்போல் தவழும் பெண்மை உடுத்திருந்தது. முகை நெகிழா முல்லை மொட்டுகள் அவள் பல்லோடு போட்டியிட்டுத் தோற்றதால் பகைகொண்டது. எம் தலைவியோடா பகை கொண்டாய்! எனக் கேட்டுத் தென்றல், முகை அவிழா முல்லை மொட்டுகளை மோதியது. பகைவிட்டேன் என்பதுபோல் மொட்டுகள் வாய்விட்டு இதழ் விரித்துத், தோற்றதற்குத் திரையாக மணம் பரப்பியது. அகிற் புகையனைய துகில் முனையை மெள்ளப் பற்றினன்; நாணமும் அவளைப் பற்றியது. கவிதையே! இசையே! நீ நின் செவ்விதழ் திறந்து என் செவியில் தேன்மழை பொழி என்று வாய்மூடும் முன்னே... பகையரசின் பகைமுரசு அவன் காதுகளில் ஒலித்தது. வானைப் பார்த்துத் தேன் மழை பொழி என்றான்! தேன் மழையா தேவை! இதோ பொழிகிறேன் நான் என்று வான், தீ மழை பொழிந்தால் எப்படியிருக்குமோ அப்படிபட்ட நிலை அவனுக்கு.

மாதரசியின் அணைப்பைக் காட்டி, வாளென்றது அறை! மறக்குலத்தின் பெருமை காட்டி வாளென்றது பறை! நாடு வென்றால் ஏடு புகழும் போ என்றது மறை! பகையரசர் அழைப்பினை ஏற்றான். பார் புகழக் களம் வெல்வேன் எனச் சூளுரைத்தான்! களத்திலே மணக்கப் போகும் வெற்றி மகளை மனத்திலே எண்ணினான். வேதனை இருள் அகன்றது. வீரக் கதவு திறந்தது. வெற்றியொளி பிறந்தது.

நிலமகளைஅதிரடித்து, வெற்றிமகளை நினைவிருத்தி, வீரமகளைத் துணையழைத்துக் களம் போனான் காளை. பகை என்ற சொல்லேற்றி வந்த வகை வகையான பகையினத்தைத் தொகை தொகையாய்க் கைவேலேற்றிச் சாய்த்தான் காளை. பகைவர் மார்பில் செங்குருதி பொங்கருவியாகியது. பொங்கிவரும் செங்குருதிப் புத்தாற்றில்; பொன் பூத்த முடிபூண்ட மன்னர்தம் தலைகள்; மின் பூத்த வானம்போல், மண்ணில் பொன்பூத்த பொன்னி வளநதியில் வெண்பூ பூத்த நுரைக்கூட்டமென மிதந்தன.

பகையைத் தோளினால் வீழ்த்தி, வெற்றி எனும் தமிழர் பண்பைத் தடந்தோளில் ஏற்றி! அடலேறோ? அன்றி அரிமாவோ? இவன் எனக் கண்டோர் வியப்பெய்த நடைபோட்டான் வீரன்.

பகை வேலால் புண்பூத்த நெஞ்சோடும்! அப்பகையை வென்றதனால் புகழ்பூத்த தோளோடும்! அழகு தளிரதனைக் காணப்போவதனால் ஒளிபூத்த கண்ணோடும்! நெஞ்சில் ஊற்றெடுக்கும் கற்பனையால் நகை பூத்த முகத்தோடும்! அவன் நடந்தான் அவளை எண்ணி!

வருகின்ற வழியில் தன்னிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை காவிரியைக் கண்டான்! வெற்றிகொண்டு வருகின்ற காதலனை வீறுகொண்டு தழுவவரும் பாவையைப்போல் காவிரி வந்தது. பொங்கி வரும் நுரைகளோடும் கொம்போடும் கொத்தோடும் பூங்கொம்புகளையும் ஏந்தி வந்தது. களம் நோக்கிச் செல்கின்றவனை மாலையிட்டு அனுப்புகின்ற தமிழ்மரபைக் காவிரியின் கரை நின்ற கனி மரமும் பூங்கொடியும் காப்பதுபோல்; காவிரித்தாயே ஈன்ற தந்த நீ! நாங்கள் தருகின்ற கனியையும் பூவையும் ஏற்றுக்கொள் என்பதுபோல் மலரும் கனியும் உதிர்த்து நின்றன மரமும் கொடியும்.

மலர்சூடிக் கனிஏந்தி வரும் காவிரியைக் கண்டபோது அவனுக்குத் தன் காதலியின் நினைவு வந்தது. காவிரியின் நீர்ச் சுழற்சிகளை காண்கின்றபோது தன் காதலி சிரிக்கின்றபோது அவள் கன்னத்தில் விழுகின்ற குழிபோல் தோன்றியது. காவிரியைக் கண்டபோது தன் காதலி நினைவு அவனைத் தூண்டியது. கடுகி நடந்தான் இல்லம் நோக்கி!

இல்லம் நுழைந்தான். எழிலை அழைத்தான். இடை நெளிவு இசை பாட, கண்ணசைவு கவிகள் பாட, மென்துகில் காற்றிலாட, முடியாக் குழல்கள் முகில்போலாட நொடிக்கு நொடி ஓரழகைக் கொன்று, மறு அழகைத் தோற்றுவிக்கும் அந்த அழகின் ஊற்றும் அன்னம் மென் நடை பயின்று வந்தது. காளையைக் கண்டாள். நாணத்தைப் பூண்ட பளிங்கு சிலையானாள் பாவை. பளிங்கு சிலையா? அல்லது பாவையா? என அவன் அறிந்ததே இமைக்கு இமை நாணத்தால் சிவப்பேறிய அவளது கன்னத்தின் துணை கொண்டுதானே! கன்னம் மட்டும் சிவப்பேறாமல் இருந்திருந்தால் வீட்டில் அலங்காரத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பளிங்கு சிலைகளில் அவளும் ஒன்றென்றே எண்ணியிருப்பான்.

தன் கைவேல் பாய்ச்சியதால் பகை நெஞ்சில் பொங்கும் செங்குருதி கண்டபோதே, அவன் நினைவலையில் மிதந்து மிதந்து வந்த எண்ணம் பாவையரின் தேன் தூங்கும் கனியிதழ்தானே களம்! அங்கேபோ முல்லை சூடிய செல்வியரின் முறுவலைக் காணவே முடியாது. அங்கேயே இவன் நினைவில் மிதந்து

(4-ம் பக்கம் பார்க்க)

அடிமைப்பாடு

[illegible]] ஆண்டு சந்தா ரூ. 8 (16—9—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 3

கொச்சிப் பகுதிகூடச் சேர்க்கப்படாத திருவாங்கூர் மண்ணைத் தனிநாடு ஆக்கவேண்டும்; அது தனி நாடு ஆக முடியும், தனி நாடு ஆகவேண்டும் என்ற கோரிக்கையை எடுத்துக்கொண்டு, அதற்காக ஒரு சமயம் படைகூடத் திரட்ட முனைந்த அரசியல் பெரியவர் சர். சி. பி. இராமசாமி அவர்கள் தலைமையில் காங்கிரசு மந்திரிகளும், அவர்தம் நிழலில் இருப்போரும் அடங்கிய் ஒருமைப்பாட்டுக் குழுவென்னும் பெயரிய குழுவொன்று சென்னைமா நகருக்கு வருகை தந்தது.

"கருத்துரைகூற வந்திருக்கும் பிரமுகர்கள் தங்களது கருத்துக்களை ஒளிவு மறைவின்றிக் கூறவேண்டும்" என்று டாக்டர் சி. பி. அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவோ என்னவோ, கருத்துரை வழங்கப் போயிருந்த காங்கிரசுப் பெரியவர்களும் அவர்தம் ஆளுகை நிழலில் இருப்போரும் தாங்கள் காங்கிரசுக்காரர்கள் என்பதையும் மறந்துபோய், கழகக் கருத்துக்கள் சிலவற்றையும்அங்கே உதிர்த்துவிட்டிருக்கின்றனர்.

"தென்னாட்டை மத்திய அரசு உதாசினப்படுத்துகிறது"

"பல காலமாக வடக்கே பொருளாதார அதிகாரம் குவிந்து கிடக்கிறது"

"மத்திய அரசு அலுவலகங்களில் இந்தியைக் கட்டாயமாக நுழைக்கமாட்டோம் என்று தரப்பட்ட உறுதி மொழிகள் செயலாக்கப்படவேண்டும்"இவற்றோடுகூட, குறிப்பிட்ட சில பெரியவர்கள் வெளியே எதனைத் தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கின்றார்களோ அதனையே அங்கு,—தங்கள் கருத்துரைகளாக அள்ளித் தெளித்திருக்கிறார்கள்.

மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசிய பிரமுகர் ஒருவர் "தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இந்தி படித்தால்தான் விமோசனம் ஏற்படும்" என்று கூறியிருக்கின்றார்.

மற்றொருவரோ "தென்னாட்டின்மீது இந்திமொழி திணிக்கப்படுவதாக முன்பு ஒருவித பயம் இருந்து வந்தது. அவ்விதம் உண்மையாகவே இந்தி திணிக்கப்பட்டிருந்தால் நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும்" என்று கூறியிருக்கின்றார்.

தேசிய ஒருமைக்குக் கருத்துரை வழங்கப்போன பெரியவர்களிடையே ஒருமைப்பாடு இல்லைப் போலும்! மேற்கூறிய கருத்துரைகள் பொதுமக்களிடையே ஒரு திகைப்பையும், கருத்துரை கேட்கவந்த குழுப் பெரியவர்களிடையே ஒரு குழப்பத்தையும் உண்டாக்கியிருக்கலாம் என்று எதிர்பார்க்கலாம்! பாவம், ஒருமைப்பாடு காணவந்த குழுப் பெரியவர்கள் அதை எங்கே தேடுவார்களோ!

மாற்றுக் கட்சியினரின் கொடிகளைக் காணும் போது சிம்ம சொப்பனம் கண்டாற்போல் இருக்குமோ என்னவோ? "அரசியல் கட்சிகளின் கொடிகளைப் பொது இடங்களில் பறக்கவிட அனுமதிக்கக்கூடாது" என்று ஒருவர் கருத்தறிவித்திருக்கிறார். பின்னும் அவர் ஆசிரியர்களும், போலீஸ்காரர்களும், அரசு ஊழியர்களும் தமக்கு எதிரிகள் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றாரோ என்னவோ "நாட்டுப் பிரிவினையில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு அரசு அலுவல் கிடையாது" என்று காரமாகச் சொல்லியிருக்கிறார்.

அதோடு அமைந்தால் போதாது என்று "ஒருமைப்பாடுபற்றி அரசு ஊழியர்கள் பேசினாலோ, அல்லது தேசிய ஒருமைப்பாட்டை பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலோ அவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ஆகாது. ஒருமைப்பாடுபற்றிப் பிரசாரம் நடத்தி மக்களின் ஆதரவு திரட்டுவதில் அரசு ஊழியர் ஒவ்வொருவரும் ஈடுபடவேண்டும்" என்று தேசிய அரசியல் வேறு பேசிக் கருத்துரை வழங்கியிருக்கிறார்.

ஒருவர், 'சட்டத்தின் மூலமாகவே தி.மு. கழகத்தை அடக்கி ஒடுக்கிவிட வேண்டும்; அழித்து ஒழித்துவிட வேண்டும்' என்று கூறியிருக்கின்றார்.

மற்றொருவர் "நாட்டுப் பிரிவினை கோருகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசியல் சட்டத்தின்படி இடம் இல்லை. பிரிவினைப் பிரசாரம் சட்டவிரோதமானது என்று சொல்லி நடவடிக்கை எடுக்க அரசியல் சட்டத்தில் தெளிவாக இடமளிக்கப்படவில்லை. ஆகவே, பிரிவினை கேட்பது தேசத்துரோகக் குற்றமாக்கப்பட வேண்டும். அதற்காக அரசியல் சட்டத்தைத் தக்கபடி திருத்தவேண்டும்" என்றும், அரசியல் சட்டத்தின்கீழ் எழுத்துரிமையும், பேச்சுரிமையும், கருத்துரிமையும் வழங்கப்பட்டதொரு செயலே தவறுகும்என்பதுபோலும் வாதித்துக் கருத்துரைகள் வழங்கியுள்ளார்.

மொத்தத்தில் கருத்துரை வழங்க வந்த பிரமுகர்களின் கருத்துக்கள் எல்லாம் தேசிய ஒருமைப்பாடு என்பதைப்பற்றிக் கவனம் செலுத்துவதைவிடத் தி. மு. கழகத்தை அழித்து ஒழித்துவிடவேண்டும் என்பது பற்றியே கூடுதல் அளவு அக்கறை செலுத்தியுள்ளன என்பது மேற்கூறிய இரண்டு நாள் ஒருமைப்பாட்டுக் கருத்துரைகளின் மூலம் நாட்டு மக்கள் அறியப்பெறுகின்றனர்.

இன்று, இந்தத் துணைக்கண்டத்து அரசியலில் தன்னேரிலாத பெரியதொரு எதிர்க்கட்சியாக—பலம் வாய்ந்த சமநல சமுதாயக் கொள்கையுடைய,உண்மை நிறைக் குறிக்கோளும், எதிர்ப்பாற்றலும் செவ்வனே யுடைய எதிர்க் கட்சியாக விளங்கி நிற்பது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றேதான்! இன்றைய நிலையில்

காங்கிரசு ஆட்சியை அசைத்துக் கொண்டிருப்பதும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றேதான். வருங் காலத்தில் காங்கிரசு ஆட்சியைச் சாய்த்து வீழ்த்தப் போவதும், வீழ்த்தப்போகும் ஆற்றலைப் பெற்றிருப்பதும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றேதான். எதிர்க் கட்சிகள் என்ற நிலையில் உள்ள மற்ற மற்றக் கட்சி களோ காங்கிரசும், காங்கிரஸ் ஆட்சியும் இழுக்கின்ற இழுப்புக்களுக்கெல்லாம் இசைந்துபோகும் தன்மை பெற்றனவாகவும், புதுப்புது வேடங்கள் புனைவனவாக வும் எதிர்ப்பாற்றல் குறைந்தனவாகவும் இருக்கின்றன என்பதை அண்மைக்கால சிலபல நிகழ்ச்சிகள் படம் பிடித்துக் காட்டிவிட்டுள்ளன.

இவையெல்லாம் நாட்டு மக்கள் நன்கறிந்தவை.

எனவே, இன்றைய காங்கிரசு ஆட்சி தி. மு. கழகத்தை எவ்வகையிலாயினும் அழித்தொழித்துவிட் டால், துணைக் கண்டத்திலுள்ள மற்றக் காங்கிரசு எதிர் பாற்றலை அடக்கி ஒடுக்கிவிடுவது எளிது என்று எண்ணுகின்றது. அதன்மூலம் ஒருகட்சி சர்வாதி காரம் என்னும் தடியாட்சியினை நிரந்தரமாக நிலைநாட்டி விடலாம் என்பது காங்கிரசுப் பிரமுகர்களின் பெரிய நோக்கம்.

அவ்வெண்ணத்தின் வழி சென்றுதான், அந்த நோக்கத்தின் வழி சென்றுதான் ஒருமைப்பாடு என்ற பெயரிற் குழுவொன்றமைத்து நாடெங்கணும் உலாவரச் செய்துள்ளது காங்கிரசு அரசு.

இவற்றையும் நாட்டு மக்கள் அறியாதார் அல்லர், என்றாலும்,

ஒருபால் தனித்தும், ஒருபால் காங்கிரசு வலையில் சிக்கிக்கொண்டும் கிடக்கும் ஏனைய எதிர்க்கட்சியின ரும், (நாட்டில் நல்ல குடியாட்சிப் பண்பு வளர்ந்தோங்கிச் செழித்து நிற்க வேண்டுமென்ற நல்லெண்ணங் கொண்டோர்) இவற்றையெல்லாம் ஓர்ந்தறிந்து தெளிந்துகொள்ள வேண்டும் என்பது எம்முடைய இன்றைய விழைவு.

✻

2-ம் பக்கத் தொடர்ச்சி

மிதந்து வந்தது இந்தப் பாவையின் செவ்விதழ் செங்கனிதானென்றால்; அவன் முன்னால் அந்த அழகு மயில் வந்து தோகை விரித்து நிற்கின்ற போது; அவன் நெஞ்சைக் கிளறுத கற்பனையையும்; தேன் தோற்கும் கவிதை வரியையும் யாரே படைக்க வல்லார். அவள் முன்னால் நின்றால், இளங்கோவும் அவனே! அகம்பாடும் எழிற் கவிதை சங்கப் புலவர்களும் அவனன்றி வேறு யாரே உளர்!

மெள்ள இழுத்தான் மேலாடையை! அவள் பெண்ணாயிற்றே, நாணம் தேன்கூட்டு ஈயாகி அவளை மொய்த் தது. வாயைத் திறந்தாள் விடு மின் என்று சொல்ல! நாணத்தால் அவளுடைய இதழ்கள் அசைய மறுத்தன. நெடுநேரம் முயன்றதன் பின்னரே அவள் கனியிதழை முண்டி முட்டி அரையும் குறையுமாக விடு மின்! விடுமின்! என்ற சொற்கள் வெளிவந்தன. விடுமின்! விடுமின் என்றாளே தவிர... அவள் விடுவித் துக்கொள்ள முயற்சியெதுவும் செய்யவில்லை. விடுமின் என்றவுடன் அவன்தான் விட்டுவிட அவளென்ன வேண்டாத பொருளா?

களத்தில் முன்னேறிவரும் பகை வரைக் காட்டி, வேலையும் வில்லையும் விடுமின் விடுமின் என்று வீரர்கள் ஆர்ப்பரிக்கக் கேட்டுக் கேட்டுச் செவி புளித்துவிட்டவன் அவன். இரத்தக் கறை படிந்த கைகளையுடைய வீரர் கள் விரும்பிச் சொல்கின்ற அந்தச் சொல்லை; நறுந்தேன் துளிக்கும் இவளது வாயுதிர்க்க நியாயமில்லை என்று நிச்சயமாக நம்பினான். வருந்தும் இடையுடைய இவள் ஏன் விடுமின் விடுமின் என்று சொல்லி யிருக்கப்போகிறாள். என் காதுகள் தான் கோளாறு உடையனவாக இருக்கும்......விடுமின் விடுமின் என்ற சொல்லையே கேட்டுக்கேட் டுப் பழக்கப்பட்டுவிட்டதால்......... அவள் தொடுமின் தொடுமின் என் றிருந்தால்கூட அது என் செவி களில் விடுமின் விடுமின் என்று வீழுந்திருக்கக்கூடும்...அப்படியே விடுமின் விடுமின் என்று அவள் சொல்லியிருப்பாளேயானால், அவள் ஏன் என் பிடியிலிருந்து நழுவி ஓட வில்லை என்ற கேள்விகளைக் கேட் டுக்கொண்டான் தனக்குத்தானே! அப்பவும் அவன் அமைதி அடைய வில்லை. மீண்டும் அவளைப் பார்த்த படி இருந்தான்!

அவளும் நின்றபடி இருந்தாள்— அவளை உற்றுநோக்கியபோது அவ னுக்கு ஒரு தெளிவு பிறந்தது. அவ ளைப் பார்த்தபடி, வளையணிந்த கொடியவளின் கைகளை இழுத்தபடி தனக்குத்தானே சொல்லிக்கொண் டான்.

இடை சிறுத்ததால் இவள் தனம் பெருத்ததோ? அன்றி தனம் பெருத் ததால் தையல் இவள் இடை சிறுத் ததோ? என்று அவன் எண்ணும் படி அவள் நின்றாள்.

தனம் பெருத்ததால் இடை சிறுத் ததோ எனப் பார்ப்பவர்கள் வியக் கும் இந்தப் பருவ எழில் பூத்துச் செழிக்கும் புதுமலர் இவள் ஏன் விடுமின் விடுமின் என்று சொல்லி யிருக்கப்போகிறாள். அதுவுமின்றி நீண்ட நாட்களாக எனை நினைந்து ஏங்கிக்கிடந்த இவள் விடுமின் விடு மின் எனச் சொல்லியிருக்கமுடியாது என நினைத்தான்!

தனத்தின் பளுவை நெடுநாட் களாய்த் தாங்கி தாங்கி என் இடை மெலிந்துவிட்டது. வந்துவிட்டீர். இனியேனும் பிடிமின்! பிடிமின்!! இடை ஒடியுமுன்னே அதைப் பிடி மின்! பிடிமின்!! என்றுதான் இவள் சொல்லியிருப்பாள் என எண் ணினான்!

அவள் சொல்லியபடி ஆடையை விட்டுவிட்டானோ? அன்றி அவன் நினைத்தபடியே இடையை ஒடியா மல் காக்க அந்த இடையையே தாங்கினானோ! இல்லை! இடையால் தாங்கமுடியாதஅந்த இளம் உள்ளத் தானை இந்தஆடைவேறு ஏன்வருத்து கிறது என்றேங்கி இடையாடையை எடுத்தெறிந்தானோ? என்ற விளக் கங்களை எல்லாம் நமக்குத் தோன்ற யபடி நாமேதந்துகொள்ளச்சொல்லி பாடலை முடித்துவிட்டான் அந்தப் படுபாவி கவிஞன். அவனே அவ னது மொழியில் மிச்சத்தையும் சொச்சத்தையும் புனையாமல் போனானே என்று நாமெல்லாம் வருந்துகிறோம். யாரவன்? எங்கே அந்தக் கவிஞன் என்று கேட்கிறீர் களா?

இதோ! இதோ! அந்த கவிஞன் எங்கும் உளதண்முகம் என்ற கோதையர் முகங்களைப் பாடி வாசு பர் உள்ளங்களிலே ஏற்றிய குறு தணியுமுன்னே அடுத்த அடியி லேயே எங்கும் உளபொங்குமிளநீ என்று காதல்தேன் சொட்டச்சொட் டக் கவிபாடி; நம்மையெல்லாம் சூடேற்றும் கவிஞன் செயங்கொண் டான் புன்முறுவலோடு நிற்கிறான். அவன் படைத்த தேனூற்றுதான் இதுவரை நீராடியது. இதோ அந்த தேனூற்று. சுவைமின்! சுவைமின்!

பாடல்:—

'விடுமின், எங்கள்துகில்
விடுமின்' என்றுமுனி
வெருளி மென்குதலை, 'துகிலினை
பிடிமின்!' என்ற பொருள்
விளைய நின்று அருள்செய்
பெடைநலீர்! கடைகள் திறமினே

க. ப. பாடல் எண் 2

மக்கட் பாடகன்

[கனகு]

சென்ற இதழ் தொடர்ச்சி...

"ஆட அட அடடா! என்ன காரியம் செய்தீர் மூர்க்கரே!"

அந்தத் தலைவனின் பெயரே மூர்க்கன்தான்.

"உங்களுக்குப் பிடித்தமான காரியம்! எனக்கு விருப்பமான காரியம்! அதைத்தானே நான் செய்திருக்கிறேன்!

"எனக்குப் பிடித்தமான காரியம்தான். என்றாலும் எடுத்த எடுப்பிலே அதை நான் செய்வதற்கு விரும்பவில்லை. ஆள் நம்முடைய வலையில் சிக்குவானா என்று கடைசி வரையிற் பார்த்துவிட்டுத்தான் முடிவாக இந்தப் பிடித்தமான காரியத்தைச் செய்திருக்கவேண்டும்! நீர் அவசரப்பட்டுவிட்டீர்!"

"நான் அவசரப்பட்டு விடவில்லை பிரபு. நானும் என்னாலான எல்லா முயற்சிகளும் செய்துதான் பார்த்தேன். இந்தப் பயல் என் பொறுமையை முதலிலிருந்து சோதனை போட்டுக்கொண்டே வந்தான். நம் சட்டத்தை இவன் சாக்கடை என்கிறான். என் அதிகாரத்தை இவன் வெறி நாய் என்கிறான். எப்படிப் பிரபு ஆத்திரப்படாமல் இருக்கமுடியும்?"

"ஓ!"

அமைச்சர் சிறுபொழுது பேசுதலின்றி நிற்கிறார். பிறகு சொல்கிறார்:

"இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. நானும் முயன்று பார்க்கிறேன். எப்படியாவது இவன் போகின்ற போக்கை மாற்றி நம் கையாள் ஆக்கிவிட வேண்டும்! நான் இப்போதுதானே வருகிறேன்! இவன் என்மீது ஐயப்படுவதற்கு ஒன்றும் இருக்கமுடியாதல்லவா! நீர் மட்டும் என் உரையாடலில் வருகின்ற செய்தியை அப்படியே எடுத்துக்கொண்டு விடாமல், வழக்கப்படி என் தந்திர வார்த்தையைப் புரிந்துகொண்டு, நிலைமையைக் கவனித்துக்கொண்டு வரவேண்டும்! உம்மீது நான் என்ன பழியைச் சுமத்தினாலும் பொறுமையாகவே அதை ஒப்புக்கொள்பவர் போல் பாவனை காட்டிக்கொண்டு, எதிர்மொழி ஏதும் பேசாமல் அப்படியே நின்றுகொண்டிருக்க வேண்டும்."

"என்ன! பழிகூடவா என்மீது சுமத்திப் பேசுவீர்கள்? நான் எப்படி அதைச் சும்மா கேட்டுக்கொண்டு நிற்க முடியும்?"

"சும்மா கேட்டுக்கொண்டு நிற்க முடியாவிட்டால், ஆடிக்கொண்டு கேட்டுக்கொண்டு நில்லும் ஐயா! நான் சொல்வதை நீர் புரிந்துகொள்ளமாட்டேன் என்கிறீரே! நான் உம்மீது பழி சுமத்திப் பேசப் போவது, இந்தப் பயலை அவன் போகின்ற வழியிலிருந்து திருப்பி, அவனை நம் பக்கம் இழுத்துக்கொள்ள முடியுமா என்று பார்ப்பதற்குத்தானே! நான் உம்மீது பழி சுமத்திப் பேசப்போவது வெறும் நடிப்புக்காக; உண்மையாக அல்ல. நீரும் அப்படியே நான் சுமத்துகின்ற பழியை ஒப்புக்கொள்கின்றவர்போல் நடிப்புக் காட்டிக்கொண்டு பொறுமையோடு சும்மா நில்லுமேன்!"

"அது எப்படி? எனக்கு அவ்வளவாக உங்கள் வார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லையே! நீங்கள் என் மீது பழியைப் போட்டுப் பேசப் போவது. ஒரு சாதாரணமான மனிதன் எதிரில் அல்லவே!"

"சாதாரணமான மனிதன் இல்லாமல், இந்த அற்பப் பயல் என்ன பெரிய மாமேதையா? உலக அரசியலுக்கெல்லாம் ஒப்புயர்வற்ற தலைவனா இவன்? உலகத்து அதிகாரமெல்லாம் இவன் கைபட்டுக் கொண்டுதான் கிடக்கின்றதா?"

"அரசியலில் எவர் பெரியவர், எது பெரியது என்பதுபற்றி நானும் நீங்களும் வாதம் செய்துகொண்டு நிற்பதோ, வாதம் செய்யப் புகுவதோ அவ்வளவாகப் பொருத்தமில்லை என்று சொல்வதைவிடப், பொருத்தமே இல்லை என்று சொல்லத்தான் நான் விழைகிறேன். அது உண்மையில் தெருவிலே மணல்வீடு கட்டிக் கொட்டாங் காய்ச்சி வைத்து, மணற் சோறு சமைத்து விளையாடுகின்ற சிறுபிள்ளைகள் உண்மையளவில் சமையற் கலையில் தேர்ந்தவர்கள், சுவை நிரம்ப ஆக்கித்தரும் பாலன்னத்தைப் பற்றியும், செய்துதரும் பச்சடியைப் பற்றியும் ஆய்வு செய்வது போலாகும்."

"என்ன! உம் கூற்றுப்படிஎன்னையொரு அரசியல் சிறுபிள்ளையாக்கி விட்டீரே!"

"என்னையும் சேர்த்துக்கொண்டுதான் சொல்கிறேன். உங்களை மட்டுமல்ல! நாம் தனிமையிலிருக்கிறோம். நம் உரையாடல் யார் காதிலும் விழப் போவதில்லை. நம் உள்ளத்துக்கு நன்றாகத் தெரிந்ததை நாம் ஒருவருக்கொருவர் மனம்விட்டுப் பேசிக்கொண்டு, உள்ளதை உள்ளது என்று ஒப்புக்கொள்வதில் தப்பேதுமில்லை."

அமைச்சர் கண்களை உருட்டி விழித்து, மூர்க்கனை வெறித்துப் பார்க்கிறார். மூர்க்கன் மேலும் பேசுகிறான். அவன் பேச்சோடுகூட இப்போதும் அழுகிய பழங்களின் வாடை — நெடி — கலந்து வெளிப்படத்தான் செய்தது. அது பாடல் வல்லானை மூச்சு முட்டச் செய்தது போல் இந்த அமைச்சரை ஒன்றும் செய்யவில்லை. இந்த அமைச்சருக்கு அது பழக்கப்பட்டது. அவர் அதைப் பெரிதுபண்ணிக் கொள்ளவுமில்லை. அதே வேளை அமைச்சர் சுவைவிட அறிவாளியைப்போல் இப்போது அந்த மூர்க்கன் பேசத் தலைப்பட்டிருந்தான். பாடல்வல்லானிடம் அவன் உரையாடிக்கொண்டிருந்தபோது அவனுக்குத் தலையாட்டத்தைத் தந்துகொண்டிருந்த, அவன்பால் குழறுமொழியை உண்டாக்கிக்கொண்டிருந்த மயக்க வெறியோ, சினவெறியோ இப்போது அவனோடு உறவாடிக்கொண்டு கிடக்கவில்லை. நெடி அவனிடமிருந்தாலும், வெறி அவனிடமிருந்து இப்

போது விடைபெற்றுக்கொண்டிருந்தது. அவ்வாறே சினத்தின் வெற்று நெடிதான் இப்போது அவனிடம் தென்பட்டது. அந்த வெறி எங்கோ ஓடி ஒளிந்திருந்தது. அந்த மயக்க வெறியும், சினவெறியும் அவனிடமிருந்து ஓடியிருந்தது அமைச்சரின் வருகையால் அன்று அன்று.

பாடல்வல்லானை அந்த மூர்க்கன் அடி அடியென்று அடித்தபோது அவனோடு இரண்டறக் கலந்து கிடந்த அவனுடைய சினவெறி கொடிய நாகபாம்பின் நச்சு இறங்குவதுபோல் மெல்ல மெல்ல இறங்கிப்போய்விட்டது. பாடல்வல்லான் பட்ட வேதனை கணந்தோறும்,கணந்தோறும் பெருகிப் பெருகி அவன் நினைவிழந்து விழும்போது அந்த மூர்க்கனின் வெறியும் செயலிழந்து ஒடுக்கங் கண்டுவிட்டது. எனவே இப்போது அந்த மூர்க்கன் நினைவுத் தெளிவோடு பேசத் தலைப்பட்டான்.

‘‘அமைச்சர் பிரபு! நீங்கள் இந்தப் பாடல் வல்லானைச் சாதாரணமானவன் என்று சொல்கிறீர்கள், அற்பப் பயல் என்கிறீர்கள்! நானும் அப்படித்தான் சற்றுமுன் அவனைத் திட்டினேன். உண்மையில் இவன் சாதாரணமானவன் அல்லன். இவன் அற்பன் அல்லன். இவனைப் பற்றி நாம் இருவரும்—அதாவது ‘இந்த நாட்டின் அதிகாரம் முழுதும் என் கையில்தான் இருக்கின்றது’ என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற நீங்களும், உங்கள் அதிகாரம் அவ்வளவையும் செயல்படுத்தும் ஆற்றல் என்வசமே இருப்பதாக எண்ணிக்கொண்டு இறுமாந்த நிலையில் இருக்கின்ற நானும்—ஆக நாம் இருவரும்—இவ்வளவு தூரம் இவனைப்பற்றிப் பேசப் புகுந்திருக்கும் இந்த நிலைமையே இவன் ஓர் அற்பன் அல்லன், இவன் ஓர் சாமானியன் அல்லன் என்று விளம்பவில்லையா?’’

‘‘என்ன இது! உம்முடைய பேச்சில் இன்று புது மாதிரியான வாடை வீசுகின்றதே! இந்தப் பாடல் வல்லானைச் சேர்ந்தவர்கள் தம்மைப் பற்றி எதைப் பெருமையாகப் பேசிக்கொள்கிறார்களோ, அதை அல்லவா நீர் — அவர்களிடத்தில் நின்றுகொண்டு பேசுவதுபோல், அவர்களின் வழக்கறிஞராக மாறி விட்டதுபோல் பேசுகின்றீர்!’’

‘‘நான் அவர்களுடைய வழக்கறிஞனாக மாறிவிடவில்லை. உள்ளதைச் சொன்னேன். ஏன் அதைச் சொன்னேன் என்றால், இவன் எதிரில் என்னை வைத்துக்கொண்டு நீங்கள் நடிப்புக்காகப் போடுகின்ற பழியை இன்றில்லாவிட்டால் நாளை, இவன், மக்கள் மத்தியில் வைக்கத்தான் போகிறான்.........’’

‘‘நிறுத்தும் ஐயா, நிறுத்தும்! உம்மைப்போல ஒரு தொடை நடுங்கியை நான் பெரிய காவல் தலைவனாக நியமித்ததே முட்டாள்தனம். எவனோ ஒரு பெரியவன் சிபாரிசு செய்தானே என்பதற்காகத்தான் உமக்கு இந்தப் பெரிய வேலையைப் போட்டுக் கொடுத்தேன். நீர் என்னவென்றால், சமயத்தில் காலை வாரப் பார்க்கிறீர்!’’

‘‘காலைவாரப் பார்க்கவில்லை நான். எவ்வளவுதான் பெரிய அதிகாரமாயிருந்தாலும், அந்த அதிகார போதையே நிரந்தரமானது என்று எண்ணிக்கொண்டு காலத்தை ஓட்டிவிட முடியுமா? எவ்வளவுதான் அந்த அதிகாரத்தை எனக்கு நீங்கள் அளித்தவராயிருந்தாலும், அதற்காக வரை முறையில்லாமல் உங்கள் வார்த்தைகளையே கேட்டுக்கொண்டு நிற்க முடியுமா என்னால்! நீங்கள் செய்கின்ற எல்லையில்லாத தவறுகளுக்கும், தீமைகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆகிய எல்லாப் பழி பாவங்களையும் நானே சுமை தாங்கியாக மாறி ஏற்றுக்கொண்டுவிட முடியுமா? நானே பலியாடாக மாறிவிட முடியுமா? எனக்கும் மனச்சான்று இருக்கின்றது என்பது ஒருபுறமிருக்கட்டும். நாளை நானும் இந்த மக்கள் புழங்குகின்ற பகுதிகளிலே புழங்கவேண்டாமா? நான் செய்கின்ற ஒவ்வொன்றுக்கும் காரணமாக இருக்கின்ற நீங்கள் எல்லாவற்றையும் என்மீது சுமத்திவிட்டு; ஒன்றுமே—நியாயத்துக்குப் புறம்பானது-செய்யாதவராக மாறித் தனிப்பெருந் தலைவரென உலா வர விரும்புவது நியாயமாகுமா? உள்ளதை உள்ளபடி உணர்ந்து கொள்ளுகின்ற உண்மையாளர்கள் இருக்கின்றார்கள் என்றாலும், நீங்கள் சொல்லுகின்றதையெல்லாம் நானே நேருக்கு நேர் ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகு, அவர்களால் தான் என்ன செய்ய முடியும்? அவர்களும் குழம்பிப் போய்விடமாட்டார்களா? அந்த உண்மையாளர்கள் கொள்ளுகின்ற குழப்பமே, அவர்கள்பால் ஏற்படுகின்ற ஐயமே மக்கள் மத்தியில் குற்றவாளி நானேதான்; என் போன்ற உங்களுடைய குற்றேவல்களை நிறைவேற்றுகின்றவர்கள்தாமேதான் என்றல்லவா நிலை நாட்டப்பட்டுவிடும்!’’

‘‘அப்படியானால் எல்லாப் பழி பாவத்தையும் என்மீதே போட்டுவிட நினைக்கிறீரா? நீர் இப்போது இந்தப் பாடல் வல்லானை அடி அடியென்று அடித்து மூர்ச்சைபோட்டு விழச் செய்திருக்கின்றீரே, இதுகூட நான் சொல்லிக் கொடுத்து, என் கட்டளைமீதுதான் நீர் செய்தீரா? இந்தக் குற்றத்தை யார் ஏற்றுக் கொள்வது?’’

‘‘இந்தக் குற்றத்தை நான்தான் செய்தேன்! ஆனால், இந்தக் குற்றத்தின் முக்காற்பங்குப் பழி உங்கள் மீதுதான் சுமரவேண்டும்! காற்பங்கே என்மீது விழும்!’’

‘‘என்ன, என்ன?’’

‘‘ஆறு போனதே போக்கு. அரசன் சொன்னதே நீதி’ என்று அந்த நாளில் சொல்வார்கள் — முடியாட்சிக் காலத்தில். அந்த மூதுரை அந்த நாளில் ஒருவேளை நல்லுரையாகக் கூட இருந்திருக்கலாம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ் மன்னர் எல்லாம் அதனை நல்லுரையாகத்தான் ஆக்கிக் காட்டிக் கொண்டு வந்தார்கள் என்று வரலாறு கூறுகிறது. ஆனால், குடியாட்சி நடைபெற்று வருவதாகக் கூறப்பட்டு வரும் இன்று, அந்த மூதுரை பயன்படக் கூடாது; பயன்பட முடியாது. பயன்பட முடியும் என்றால், எப்படி இங்கே முடியாட்சி இல்லையோ, அப்படியே இங்கு குடியாட்சியும் இல்லை என்று பொருள். நடைபெறுவது ஏதேச்சாதிகார ஆட்சி என்பது விளங்கிவிடுகிறது.

‘‘இன்றைய நிலையில் நீங்கள் அரசன் சொன்னதே நீதி என்பதை, அரசு சொன்னதே நீதி என்று ஆக்கிக்கொண்டு வருகிறீர்கள். அந்த அரசுக்குத் தலைவராக நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். அதுவும் நீங்கள் பொதுவாகவே, எல்லாருக்கும் விளங்குகின்ற முறையில் வெளிப்படையாக வேறு பேசிக்கொண்டுவருகிறீர்கள் ‘நான் நினைத்தால் இன்று இதைப் பொடிப் பொடியாக்கிவிடுவேன், அதைத் தூள் தூளாக்கிவிடுவேன், அவனை அழித்தொழித்துவிடுவேன், இவர்களை நிரந்தரமாக மூடிப்போட்டுவிடுவேன் என்றெல்லாம். ‘நான்’ என்று சொல்வதே குடியாட்சிப் பண்புக்கு முரணானது. நீங்கள் பயன்படுத்தி

வருவதோ பெருமளவு அந்த 'நா' னைத்தான்.

"எனவே, இவற்றையெல்லாம் நாங்கள் ஒப்புநோக்கிப்பார்க்கிறோம்! நடைபெறுகின்ற ஆட்சி எப்படிப் பட்ட ஆட்சி என்பது, தானாகவே புரிந்துவிடுகிறது. அந்த நாளில் அரசன் ஆணைக்கு அடிபணிந்திருந் தவர்கள் எப்படி இயங்கினார்களோ, அப்படி நாங்களும் இயங்கவேண் டிய கட்டாயம் ஏற்பட்டுவிடுகின் றது. அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்ற நிலைக்கு எங்கள் மனச் சம்மதமில்லாமலே நாங்கள் தள்ளப்படுகிறோம். பின்னும் உங்க ளுக்குப் புரியும் வண்ணம் சொல்ல வேண்டுமானால், ஒருபால் வயிற்றுப் பாட்டுக்காகவும், பிறிதொருபால் வீடு வாழ்க்கைக்காகவும் நாங்கள் இப்படி ஈடுபடவேண்டிய கட்டாயத் துக்குள்ளாகின்றோம்! ஆக, எங்கள் மனச்சான்றுக்கு முரணாக உங்கள் எண்ணத்தை நாங்கள் எதிரொலிக் கின்றோம்! என்னைப் பொறுத்தவரை யில்—நானும் ஓரளவு கொடு மனம் படைத்தவன் என்பதை மறுக்க முடியாது என்றாலும்—உங்கள் உள் ளத்தை நிறைவுபடுத்தவே பெரும் பாலும் இவ்வழி இயங்கிவருகிறேன். எனவே,

"நீங்கள் எண்ணம் என்றால், அதன் எதிரொலிதான் நாங்கள். நீங்கள் உருவம் என்றால் நாங்கள் நிழல்.

"இப்போது,

"சாட்டப்படும் குற்றம் எண்ணத் தின்மீதோ? எதிரொலிமீதா? கூறப் படவேண்டிய குறை உருவத்தின் மீதா, நிழல்மீதா? எதிரொலிதான் குற்றவாளி என்றால், நான் குற்ற வாளி; என்னைப்போன்ற மற்றவர் கள் குற்றவாளிகள். நிழல்மீது தான் குற்றம் சாட்டப்படவேண்டு மென்றால், என்மீது சாட்டுங்கள் குற்றம். என்போன்ற மற்றவர்கள் மீது சாட்டுங்கள் குற்றம்! நிகழ்ந் தவை அனைத்துக்கும் எண்ணந் தான் பொறுப்பு; தவறுக்குக் கார ணம் உருவந்தான்; நிழலல்ல என் பது தெளிவாக்கப்பட்டுவிட்டால்...? அந்த எண்ணம் நீங்களேதான், அந்த உருவம் நீங்களேதான்..."

"சரி, சரி நிறுத்திவிடும் பேச்சை இத்தோடு. இனி நீர் இந்த அலு வலுக்குப் பொருத்தமே இல்லை. என் எதிரிகள் எனப்படுவோர்கூட இப் படி என்னோடு சொற்போர் நடத்தத் துணியவில்லை. இப்படி என்னிடம் எதை எதையோ எடுத்துச்சொல்லி உள்ளத்தை நடுங்கவைக்கவில்லை. இப்படி என்மீது முழுக்க முழுக்கக் குற்றங்களைச் சாட்டிவிடவில்லை. உம், உம்! நகர்ந்துவிடும் அப்பால்! போய்விடும்! போய்விடும்! மேலே ஆகவேண்டியதை நானே பார்த்துக் கொள்கிறேன்!"

இவ்வாறு அமைச்சர் வார்த்தை களைச் சிந்தியதும் அந்தக் காவலர் தலைவன் பின்னும் ஏதோ பேசுவ தற்கு வாயெடுத்துவிட்டு, வார்த்தை வராத காரணத்தாலோ என்னவோ, அப்படியே வெளியேறிவிட்டான், திரும்பிக்கூடப் பார்க்காமல்.

அவன் வெளியேறியபின்னர்கீழே கிடந்த, பேச்சுமூச்சற்றிருந்த, குருதி யிற் குளித்துக்கொண்டிருந்த பாடல் வல்லானை உற்று நோக்கினார் அமைச்சர். பிறகு எதையோ நினைத்துக்கொண்டவர்போல் அழைப்பு மணியை அழுத்தினார். காவல் ஊழியர் இருவர் அங்கே வந்து நின்றனர்.

இவனை அழைத்துப்போய் ஒரு தனியறையில் பூட்டிவையுங்கள். மருத்துவரைக் கூட்டிவந்து காட்டுங் கள். மறுபடியும் நாளை காலையில் இவனை நான் பார்க்கவேண்டும்" என்று கூறிவிட்டு அமைச்சரும் அவ்விடமிருந்து வெளியேறினார்.

திரும்பவும் பாடல்வல்லான் கண் விழித்துப் பார்த்தபோது அவன் ஒரு சின்னஞ்சிறிய அறைக்குள் கிடத்தப்பட்டிருப்பதை உணர்ந் தான். காடை விளக்கின் ஒளி அங்கே பரவிக்கிடந்தது. அந்த ஒளி அப்படி மங்கலாகத் தென்படுவதற் குக் காரணம் அவன் பார்வைதான் என்று அவன் எண்ணிக்கொண் டான். அவன் கட்டாந்தரையில் கிடத்தப்பட்டிருந்தான். சாதாரண மாக உடலிற் காயமேதும் இல்லாத வர்கள் படுத்தாலே உறுத்துதல் மூலம் வேதனையைத் தரக்கூடியது அந்தக் கட்டாந்தரை. பாடல்வல் லானோ உடல் எங்கும் அடிபட்ட காயத்தை உடையவன். இப்படி, அப்படி சற்றுக்கூட அவனால் அசையமுடியவில்லை. அசைந்தால் சொல்லமுடியாத பெரிய வேதனை. அசையாமல் இருக்கவும் முடிய வில்லை. அப்பப்ப, அந்த நிலையில் அவன் பட்டபாடு! எப்படி விவரிப் பது அதை! அவன் தன்னையறியா மல், வேதனை தாங்கமுடியாமல் முனகத்தொடங்கினான்.

அப்போது ஒருவன் "டேய் சத்தம் போடாதே!" என்று அதட்டிக் கொண்டு உள்ளேவந்தான். 'அவன் யார்?' மெல்லப் பார்வையை அவன் பக்கம் திருப்பினான். அதற்குள் அவன் பாடல்வல்லான் அருகில் வந்தான். அவன் உடலை முரட்டுத் தனமாகப் பற்றினான். அவனுக்கு எங்கெங்கே வேதனை பெருகியிருந் ததோ, அங்கங்கே அந்த வேதனை யைப் பின்னும் பெருக்கிவிட வந்த வன்போல் முரட்டுத்தனமாக எதையோ பூசினான். அந்தச் சாக் கில் அந்தக் கட்டாந்தரையில் அவ னைப் புரட்டிப் புரட்டி எடுத்தான். அவன் மருத்துவன்போலும்! ஐயோ அவன் மருத்துவமா புரிந்தான். வேதனை நிறைந்த சித்திரவதை யினையே அங்கு புரிந்துகொண்டிருந் தான். பாடல்வல்லானால் அந்த வாதை பொறுக்கமுடியவில்லை. தன் னைச் சமாளித்துக்கொண்டு, மெல் லக் கைகளை நீட்டி அந்த மருத்து வன் எனப்பட்டவனின் கால்களைப் பற்றினான். "ஐயா உங்களுக்குக் கோடி கோடிப் புண்ணியமாகப் போகும். நீங்கள் என்னை இப்படியே விட்டுவிடுங்கள். மருத்துவம் ஒன் றும் வேண்டாம்!" என்று மெல்லிய குரலில் வேண்டுகோள் விடுத்தான்.

அந்த வேண்டுகோளை அந்த மருத் துவன் கேட்டதும் தன்னையொரு இதயமற்ற மிருகம் என்று அந்தக் கணமே காட்டிக்கொள்ள விழைந் தான் போலும். அப்படியே பாடல் வல்லான் பற்றியிருந்த தன் காலை உதறிக்கொண்டு, தன் வலுவை யெல்லாம் ஒன்றுதிரட்டி ஓங்கி ஒரு உதை உதைத்தான் பாடல்வல் லானை. அந்தத் தாக்குதல் வலு விழந்து கிடந்த பாடல்வல்லானை நாலைந்துமுறை உருண்டுபோய் ஒரு மூலையில் விழச்செய்தது!

திரும்பவும் மூர்ச்சைபோட்டு விழ வில்லை பாடல்வல்லான். எப்போது மில்லாத பெரு வேதனை திரும்பவும் அவனை வந்து கப்பிக்கொண்டு வதைத்து வாட்டியது. அப்படியே அந்த மூலையிற் சுருண்டுகிடந்தான் அவன். சிறையில் மனிதன் எப்படி மிருகக் குணம் படைத்தோனாக மாறி நடந்துகொள்கிறான். சிறை யில் மனிதன் எப்படி மிருகமாக நடத்தப்படுகிறான் என்பனபற்றி அவன் சிந்தனை ஓடத் தொடங் கிற்று. அதே வேளை, அந்த மருத் துவன் "அற்பப் பயலே! நான் செய் கிற மருத்துவம் உனக்கு வேண் டாமா! இனிமேல் நீ பிணமாவதற்

குத்தான் நான் மருத்துவம் செய்யப் போகிறேன்'' என்று கறுவிக் கொண்டு வெளியிற்போய் ஏதோ கனமான ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து அதைப் பாடல் வல்லான்மீது வீசப்போனான். அவன் அதை வீசிவிடுவதற்குள் மற்றொருவன் வந்து அவன் கரத்தைப் பற்றிக் கொண்டான்.

"வேண்டாம்! இவனைக் கொன்று விடாதே!"

"ஏன், உன் மனத்திலிருந்து இரக்கம் சுரந்துகொண்டு வருகின்றதோ?"

"இரக்கமாவது, உறக்கமாவது!"

"பின்னர், கொலைக் குற்றம் வந்து சுமந்துவிடும் என்று அஞ்சுகின்றாயோ?"

"சிறைக் குள்ளிருந்துகொண்டு, அதன் ஏகபோக அதிகாரத்தை வைத்துக்கொண்டு உன்னைப் போன்ற மருத்துவர்களைப் பக்கத் துணையாக இருத்திக்கொண்டு, எவனாவது கொலை செய்வதற்கு அஞ்சுவானா? அப்படி அஞ்சுவதாயிருந்தால் வெளியில் உள்ள மாந்தர் எண்ணக்கூடத் துணியாத கொடுமைகள் பல இயற்றுவதற்கு முன் வருவானா?"

"அதுதானே கேட்டேன். அஞ்சாதே! நான் யார் தெரியுமல்லவா? மருத்துவன்! எவன் எதனால் இறந்தாலும் சோதனை போடுகின்றவன்! என்னுடைய சான்றுக்கு எதிர் சான்று எங்குமே எழுந்தது கிடையாது!"

"அது எனக்குத் தெரியாதா?"

"அப்படியானால் ஏன் இவனை நான் தாக்குவதைத் தடுத்தாய்?"

"அமைச்சருடைய கட்டளை அது"

"இவனைக் கொல்லக்கூடாது என்றா?"

"இல்லை. அது வேறு செய்தி. என்றாலும் கொல்வதிற் பயனில்லை. கொன்று போடுவது மிக எளிய வேலை. ஒரு கட்டாரியை எடுத்து இவனைத் தாக்கினால் இவன் செத்துப் போகிறான். இவனைக் குறி வைத்து ஒரு துப்பாக்கிக் குண்டை வெடித்துத் தீர்த்தால் இவன் செத்துப் போய்விடுகிறான்! அது நம்மைப் பொறுத்தவரையில், அதாவது ஒரு எறும்பின் உயிரையும், ஆறறிவு படைத்த, நம்மினும் மேலானதொரு மனிதனுடைய உயிரையும் ஒரே மாதிரி எண்ணிக் கொலைசெய்து தீர்க்கும் மனப்பக்குவம் பெற்றுள்ள நம்மைப் பொறுத்தவரையில் — மிக மிக எளிதான வேலை! ஆனால், அதன்மூலம் நமக்கு இனிமை பயக்கும் வேலையேதும் இல்லாமற் போய் விடுகிறது. அமைச்சருக்கோ— இங்கே நாம் செய்கின்ற அநியாய அட்டூழியச் சித்திரவதைகளையெல்லாம் நேருக்கு நேர் காணமுடியாத காரணத்தால் இவற்றைச் சிறியதாக எடுத்துக்கொள்ளும் மனப்பான்மையும், ஒருவனை இங்கே கொன்றுவிட்டால் மட்டும் அதை மிகப் பெரிதாக எண்ணிக்கொள்ளும் தன்மையும் பெற்றுள்ள பொது மக்கள் எனப்படுவோர் 'இவன் கொலை செய்தான் என்று (பழி சுமத்துவார்களே என்று அஞ்சுதல் கொண்டல்ல. ஏனெனில் இன்னும் நாட்டிலுள்ள பலர் அந்த நிலைக்கு வந்து சேரவில்லை என்ற குருட்டுக்கம் இன்னும் இருக்கின்றது) தம்மை எள்ளுவார்களே என்று மனத் தயக்கம் ஒருபுறம். மற்றொரு புறம் தம்மை எதிர்த்து நிற்பவன் எவனாவது ஒருவன் துரோகியாக மாறிவிடக் கூடாதா! குறைந்த அளவு, தான் செய்கின்ற, நெருக்குதல் கொடுமை தாங்கமுடியாமலாவது தன்னைப் புகழ்ந்துஒருவார்த்தை சொல்லிவிடக்கூடாதா என்ற பேரவா! எனவே எடுத்த எடுப்பில் கொலை செய்து தீர்ப்பதில் அவருக்கும் விருப்பில்லை. மொத்தத்தில் நமக்கும் சரி, அவருக்கும் சரி இதில் மனநிறைவே கிடையாது. அதோடு கூட இவன் மாதிரி ஆட்களை நாம் படுத்துகின்ற பாடு பொறுக்கமாட்டாமல் இவர்கள் உரக்கக் கூச்சல் கிளப்பும்போது, அந்தக் கூச்சல் சிலவேளை வெளியே எட்டிவிட்டால் கூட அடைக்கப்பட்டிருக்கும்அந்தப் பயல்தான் அட்டூழியம் செய்கிறான். அவனைச் சுட்டுக் கொன்றிருக்க வேண்டும்—அவன் செய்த அட்டூழியத்துக்கு. ஆனால் எங்கள் ஆட்கள் துப்பாக்கியால் சுடவேயில்லை. தடியால் அடித்தே நிலைமையைச் சமாளித்திருக்கிறார்கள் என்று சொல்லி விடலாம். இதுவரை அப்படித்தான் சொல்லி வந்திருக்கிறார்கள். வெளியே உள்ள சிலரும் இருக்கும், இருக்கும், என்று ஒப்புக்கொள்ளவும் முன்வருகிறார்கள்.

"எனவே, நம் அமைச்சரைப் பொறுத்தவரையில், இவனை இப்போதே கொன்றுவிடக் கூடாது. நாளை காலையில் இவனை அழைத்து வரச் சொன்னதுகூட எதற்கென்று தெரியுமா? இவனிடம் எவ்வளவு தொலைவு நயமொழி பேசவேண்டுமோ, அவ்வளவு தொலைவு நயமொழி பேசவேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு இச்சகம் பேசமுடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு இச்சகம் பேசவேண்டும்'. என்ற நோக்கத்தோடுதான். அதற்காகத்தான் உன்னை இங்கே உடனே அனுப்பி வைக்கச் சொன்னார். நாளை காலையில் இவனைச் சற்றுத் தென்போடு அனுப்பி வைக்கவேண்டிய பொறுப்பு உன்னைச் சார்ந்தது. நீ என்னடா வென்றால் அவனைக் கொல்லவே துடிக்கிறாய்! பொறு பொறு! சற்றே பொறு! உன் பசிக்கு வேண்டிய இரை கிடைக்காமலா போகப் போகிறது! நம் அமைச்சர்—புண்ணியவான் — அவர் இருக்கும் வரையில் நாம் எவ்வளவு வேண்டுமானாலும் குருதி வேட்கை கொள்ளலாம். நம் குருதி வேட்கையைத் தீர்த்து வைப்பதே அவருடைய முழு முதற் கடமை! பொறு பொறு! நீ மட்டும் உன் குருதி வேட்கையை இப்படித் திடுதிப்பென்று தீர்த்துக் கொண்டால், நான் என்ன செய்வது? அமைச்சர் எங்கே போவார்? உனக்கு இருப்பதைப்போல்தானே அமைச்சருக்கும் குருதி வேட்கை இருக்கும்? இப்போதைக்கு அமைச்சர் விருப்பத்துக்கு இசைந்து இவனுக்குக் கொஞ்சம் தென்பை உண்டாக்கு! இருக்கவே இருக்கின்றது நாளை! பிறகு நீயும், நானும் அமைச்சரும் ஆக எல்லாரும் சேர்ந்து நம் குருதிப் பசியை வேண்டுமளவுக்குத் தீர்த்துக் கொள்ளலாம்!"

மருத்துவன்மேலே ஒன்றும் பேசவில்லை. மருந்துப்புட்டிகளை எடுத்து வரச்சென்றான். சிறையறைக்குள் கிடந்து மரணவாதையைத் துய்த்துக்கொண்டு கிடந்த பாடல் வல்லான் செவியில் இந்த உரையாடல் முழுவதும் விழத்தவறவில்லை.

பாடல் வல்லான் தன்வேதனையை மறந்தான். 'நான் எப்படிப்பட்டதொருதூயகொள்கைக்காக, பெரியதொரு குறிக்கோளுக்காக இப்படிச் சிறையிலடைக்கப்பட்டிருக்கிறேன்; துன்பவாதைக்குள்ளாக்கப்படுகிறேன்' என்று அவன் எண்ணினான். அவனையறியாமலே அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடிற்று. அவன் உடலிலிருந்து வேதனை தந்துகொண்டிருந்த விழுப்புண் ஒவ்வொன்றும் அவனைப் பெருமிதத்திலாழ்த்திற்று.

அவ்வேளை சட்டென்று அவன் உள்ளத்தில் அவன் வீட்டுநினைவு

வந்தது. வீட்டுநினைவு அவன் மகிழ்ச்சிக்குச் சற்றே தடைவிதித்தது. வெளியிலிருக்கும்போது எவ்வளவுதான் பொதுத்தொண்டு பொதுத்தொண்டு என்று அவன் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டு திரிந்தாலும், தன்னைப்பெற்ற அன்னையை அவன் கிழமைக்கொரு முறையாவது பார்த்துவிட்டு வராமலிருந்ததுகிடையாது! இனித், தன் அன்னையின் முகத்தைப் பார்ப்பதற்கு எத்தனை நாட்கள் பிடிக்குமோ என்று எண்ணியபோது, அவனை மீறிய மன உளைச்சல் அவனைக் கப்பிக்கொள்ளும் வழியிற் பெருமுயற்சி எடுக்கத் தவறவேயில்லை. தான் சிறையிற் படுகின்ற துன்பங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் அந்த அன்னை பார்த்துக்கொண்டிருப்பதுபோலவும் அதனால் அவள் மாலைமாலையாகக் கண்ணீர்வடித்து, அடித்துப்புரண்டு கொண்டுகதறுவதுபோலவும் அவன் தனக்குத்தானே கற்பனை செய்துகொண்டான்! அந்தக் கற்பனை வேதனையை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதை மாற்றுவதற்கு அவன் பெருமுயற்சி எடுக்கிறான். அதற்காக வேறுஎதை எதையோ வலியப்போய் நினைத்து நினைத்துப் பார்க்கிறான். எதைஎதையெல்லாம் நினைத்து நினைத்துப் பார்த்தாலும் தன் அன்னையைப் பற்றிய எண்ணமே மேலோங்கி அவளுடைய இன்முகம் சுற்றிச் சுற்றி வந்து முதல் இடத்தில் நின்றுகொள்கிறது! ஒருபுறம் அதை மறக்காமலும், பிறிதொருபுறம் அதற்காக வேதனைப்படாமலும் இருப்பதற்கு அவன் முயன்றுகொண்டு, முயன்றுகொண்டேயிருக்கிறான்.

திடீரென்று தன் அன்னையின் எண்ணத்தோடுகூட அவனுக்கு வேறொரு எண்ணமும், நினைவும் எதிர்பாராதவிதமாகத் தோன்றுகிறதே! ஆமாம், மங்கையின் எண்ணம்! மங்கையின் நினைவு அவன் உள்ளத்தில் அவ்வேளை ஏற்பட்டது அவனுக்கே வியப்பையளிக்கிறது.

வெளியிலிருக்கும்போது அவன் மங்கையைப்பற்றி அதிகம் நினைத்தது கிடையாது. அதிகம் அக்கறை எடுத்துக்கொண்டது கிடையாது. சின்னஞ்சிறு பருவம்முதல், பள்ளிநாள் தொட்டு அவளுடன் அவன் இடையருது பழகி வந்திருக்கிறான். என்றாலும் அவளிடம் அவனுக்குப் பற்றுதல் உண்டா இல்லையா என்ற ஆராய்ச்சியில் என்றுமே அவன் ஈடுபட்டது கிடையாது. பற்றுதல் இல்லை என்று அறுதியிட்டுச் சொல்லவும் அவன் என்றும் முனைந்தது கிடையாது. அவள் நிலையும் அப்படித்தானா? அவளும் அவனிடம் அவனைப்போல்தான் பற்றுதல் உண்டோ, இல்லையோ, பாசம் உண்டோ, இல்லையோ என்றமுறையில்தானாபழகிக்கொண்டுவந்தாள்? அந்தக் கேள்வியை அவன் தனக்குத்தானே கேட்டுக்கொண்டான். சே! இந்தக் கேள்வியெல்லாம் இப்போது எதற்கு? இந்த நினைவெல்லாம் இப்போது எதற்கு? அவன் அந்த நினைவையே தட்டிவிட முயன்றான். முடியவில்லை. அவனைமீறிய வகையில் அடிநாள்தொட்டு மங்கையோடு பழகிய ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவன் மனக்கண்ணில் திரையோவியமாக, ஒன்றன்பின் ஒன்றாக வந்து விழத்தொடங்கியது.

O

"தம்பி பள்ளிக்கூடத்துக்கா போறே?"

பள்ளிக்கூடத்திற்குப் பையும், கையுமாகக்கிளம்பிக்கொண்டிருந்த அந்தச் சிறுவன் நிமிர்ந்து பார்த்தான்! "ஓ, அடுத்தவீட்டு அத்தை!'

"ஆமாம் அத்தை. ஏன்? என்ன சேதி?"

"இன்னிக்குப் பாப்பாவையும் அழைச்சுக்கிட்டுப் போறீயா—மங்கையை?"

"ஓ, மங்கை பள்ளிக்கூடத்துக்கு வருதா? ரொம்ப நல்லது! ரொம்ப நல்லது!" அந்தச்சிறுவன் மகிழ்ந்து போய்க் குதிக்கிறான்.

"வழியில் சாலை ஓரமாத்தான் போகணும். நடுச்சாலையில் நடந்து போகக்கூடாது. வழியில் விளையாடக்கூடாது. ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக்கக்கூடாது. மங்கையைப் பத்திரமா கூட்டிக்கொண்டு போகவேணும். பத்திரமா அழைத்துக்கொண்டு வரவேணும்! தெரியுதா!"

இவை வீட்டுக்குள்ளிருந்து வந்த அந்தச் சிறுவனின் அன்னை வழங்கிய அறிவுரைகள்.

அப்போது அவன் இரண்டாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான். மங்கை அ, ஆ, படிக்க வந்தாள்.

இப்படியா தொடங்கியது அவர்கள் நேசம்! இதற்கு முன்னரே தொடங்கிவிட்டதாயிற்றே அது.

அவன் ஒவ்வொரு வகுப்பையும் ஆண்டு தவறாமல் தாண்டிக்கொண்டு வந்தான். அவள் உனக்கிளைத்தவளா நான் என்று கேட்பது போல் அவனைத் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தாள்.

அவன் உயர்நிலைப்பள்ளிக்குப் போனான். ஆனால் இரண்டு ஆண்டுகள் பள்ளி நாட்களில் காலையிலும், மாலையிலும் அவன் தொடக்கப் பள்ளிக்கும் போகவேண்டியிருந்தது—மங்கையை அழைத்துச் செல்ல, அங்கிருந்து கூட்டிவர.

அந்த ஊரில் ஒரே உயர்நிலைப் பள்ளி. ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் அங்குதான் பயின்றார்கள்! அது அவன் வேலையைச் சற்றே குறைத்தது.

தொடக்க நாட்களிலிருந்தே பாட்டு என்றால் அவனுக்கு உயிர். பள்ளியில் பாட்டுப் பாடவேண்டிய கட்டங்கள் வரும்போதெல்லாம் எந்த வகுப்பாயிருந்தாலும் அவன்தான் அழைக்கப்படுவான். விடுமுறை நாட்களில் அவன் வீட்டில் அவனையொத்த சிறுவர்கள்—மாணவர்கள் அவனைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருப்பார்கள் அவன் பாடுவதைக் கேட்பதற்கு. ஆனால், மற்றவர்களைவிட அவன் பாடுவதற்குக் காட்டிய ஈடுபாட்டில் ஊக்கம் மிகுதி யூட்டியவள் மங்கைதான். புதுப்புதுப் பாடல்களைச் சேகரித்துக்கொண்டு வந்து அவனிடம் கொடுப்பது அவள் பொறுப்பு. அவன் பெயர் வராகன் என்று எப்படியோ அமைந்துவிட்டது ஆனால், அந்தப் பெயர் அடிநாள் தொட்டு ஒருநாள்கூட அவனுக்கு வழங்கப்படவேயில்லை. தொடக்கப் பள்ளியில் ஆசிரியரே அவனைப் பாட்டுக்காரன் என்று ஒருநாள் கூறினார். அதை மாணவர்கள் எல்லாரும் ஒரே பிடியாகப் பிடித்துக்கொண்டார்கள். அப்படியே அது உயர்நிலைப் பள்ளிக்கும் அவனைப் பின் தொடர்ந்து வந்தது.

உயர்நிலைப் பள்ளிக்கு மங்கையும் வந்து சேர்ந்தபோதுதான் பாட்டுக்காரன் என்ற பெயர் பாடல் வல்லவன் என்று ஆயிற்று. ஆமாம். அவன் சொன்னானே அந்தப் புனைபெயரைத்தானே வைத்துக்கொண்டதாக, அதுதான் இல்லை. அந்தப் புனைபெயர் அவனுக்கு மங்கையால் சூட்டப்பட்ட பெயர்,

அப்பப்ப, பள்ளி நாட்களில் மங்கையோடும், அவனோடும் ஒருசேரத் தொடர்பு கொண்ட நிகழ்ச்சிகள் எத்தனை! அவை அவ்வளவும் எத்துணைப் பசுமையானவை! அவற்றை அவனால் எந்தக் காலத்திலும் மறக்கவே முடியாது.

அவ்வளவு பாசத்தோடு, நேசத்தோடு, பற்றோடு, பரிவோடு அவர்கள் இருவரையும் பழகவிட்டு, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்துவிட்டுத், திடீரென்று ஒரு நாள் வந்தார்களே அவற்றையெல்லாம் துண்டித்து விடுவதற்கு! யார்? வேறு யார்? ஊக்கமூட்டி அவற்றை வளர்த்தவர்களேதான் இப்போது உதறித் தள்ளு என்று பெருங்குரல் எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

தங்கள் வீட்டெதிரே முல்லைப்பதியம் ஒன்று கொண்டுவந்து நட்டு, அது துளிர்த்து வளர்வதைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து, அதன் பக்கத்தில் பந்தல் ஒன்றைப் போட்டு, அந்தப் பந்தலில் அந்த முல்லை பெருங்களியோடு படருவதை அளவிலா மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டிருந்துவிட்டுத், திடீரென்று ஒருநாள் அந்த முல்லையைப் பார்த்து முல்லையே நீ பந்தல்மீது படராதே! என்று சொன்னால் அந்த முல்லை ஏற்றுக்கொள்ளுமா? 'பந்தலே நீ முல்லைக்கு இடம் கொடுக்காதே!' என்று சொன்னால் அந்தப் பந்தல் ஒப்புக்கொண்டு விடுமா? சொன்னவர்களும் மாந்தர்தாம் — ஆறறிவு பெற்றவர்கள். அருகிலேயே இருந்தவர்கள். அணு அணுவாக அந்த வளர்ச்சியைக் கண்டு கண்டு களித்தவர்கள். எப்படித்தான் திடீரென்று இப்படி ஒரு கட்டளை போட அவர்களுக்கு மனம் வந்ததோ! வியப்பா இது! அநியாயம், அநியாயம்!

"என் பிள்ளையின் படிப்பைக் கொடுத்துப் பாட்டுக்காரனுக்கிவிட்டாள் அந்தப் பெண்!" என்று முதலில் பழியைத் துவக்கி வைத்த பெருமை பாடல்வல்லானின் அன்னையைத்தான் சாரும்!

அந்தச் சமயம் பார்த்துத்தானா வெளியூரில் அலுவல் புரிந்துகொண்டிருந்த மங்கையின் தந்தை வீட்டில் வந்திருக்க வேண்டும்! "நான் முன்னமே சொன்னேன்! என் பேச்சைக் கேட்காமல் நீ ஆட்டம் ஆடினாயே! உன் பெண் விருப்பப்படி அந்தப் பிள்ளையோடு ஊரெல்லாம் சுற்றவிட்டாயே! இப்போது பார்த்தாயா! பழியை உன் பெண்மீதே போடுகிறார்கள்!" என்று தம் மனையாளிடம் கடிந்து விழுந்தார் மங்கையின் தந்தை.

"வரட்டும் அவள்! காலையொடித்து அறைக்குள்ளே பூட்டிப் போட்டுவிடுகிறேன்!" என்று கறுவினாள் அந்த அன்னை.

அந்த வேளை பார்த்துத்தானா பாடல்வல்லான் அங்கே ஓடிவர வேண்டும்! — அதுவும் 'மங்கை, மங்கை!' என்று அன்புக் குரல் எழுப்பிக்கொண்டு!

"டேய்! இங்கே மங்கையுமில்லே கங்கையுமில்லே! வெளியே போய் விடு! இனிமேல் இந்த வீட்டு வாசலில் அடி எடுத்து வைத்தே! காலை வெட்டிப் போடுவேன்! தெரியுதா! இனி மங்கை என்று அவளைக் கூப்பிடக் கூடாது! அவளோடு பேசக் கூடாது! அவளைப் பார்க்கக்கூடக் கூடாது! மீறினால் நான் என்ன செய்வேன் தெரியுமா? நான் யார் தெரியுமா? நான் போலீஸ் அதிகாரிடா! பெரிய போலீஸ் அதிகாரி!

யாரோ வந்து பளார் என்று முகத்திலறைந்து பொறி கலங்கச் செய்துவிட்டதுபோல் அப்படியே திகைத்துப்போய் நின்றுவிட்டான் சிறிது நேரம் அவன்.

"டேய்! ஏன்நிற்கிறே! போ, போய் விடு! போ என்றால் போய்விடு! என் கோபத்தைக் கிளப்பாதே!" என்று திரும்பவும் அதிகாரக் குரல் எடுத்து அதட்டினார் அந்த அதிகாரி.

அப்படியே திரும்பினான் அவன். அப்போது அவன் முகம் முகமாகவா இருந்தது! செத்துவிட்டது அது. சவக்களை பெற்றுவிட்டது. அவன் மெல்ல அடியெடுத்து நடந்தான். அந்த நடை மனித நடையாகவா இருந்தது. அது பிண நடையேதான்!

இந்தக் காட்சியை யார் பார்த்திருந்தாலும் உள்ளம் உருகிப்போய் விடும்! வேறு யார் பார்த்திருந்தாலும் பரவாயில்லையே! அவர்கள் உள்ளமுருகும் நிகழ்ச்சியோடு எல்லாம் முடிந்துபோயிருக்குமே! யார் அதைப் பார்க்கக்கூடாதோ அவளல்லவா பார்த்துவிட்டாள்! — மங்கை!

தன் தந்தையின் ஓங்கிய குரல் கேட்டு வாயில் எதிரே அதிர்ந்து நின்றாள் மங்கை. அங்கே தூற்றப்படுவது பாடல்வல்லான் என்று கண்டபோது அவளை அந்தரத்தில் தள்ளிவிட்டு உலகம் மட்டும் தனியே சுற்றுவதுபோல் தோன்றியது அவளுக்கு! அப்படியே கீழே விழத்தானிருந்தாள் அவள். பக்கத்திலிருந்த சுவரைப்பற்றிக் கொண்டாள்! அவளுக்கு அந்த வீடே தன் வீடு அல்ல என்ற ஒரு எண்ணத்தை உண்டாக்கிவிட்டது போலும் அந்த நிகழ்ச்சி. நெடுநேரம் வெளியிலேயே நின்றுவிட்டு ஆமாம், அங்கிருந்து அவனைக் கடந்து சென்ற பாடல்வல்லானை விளிப்பதற்குக்கூட ஆற்றலற்றுப் போய்த்தான் அவ்வளவு நேரம் அவள் அங்கே நின்று கொண்டிருந்தாள்—மெல்ல வெளியேறிப் போய்விட்டாள். அவள் அன்னையும், தந்தையும் அவள் எங்கிருக்கிறாள் என்று தேடிப்பிடித்து அழைத்துக்கொண்டா வந்தார்கள்? இழுத்துக்கொண்டல்லவா வந்தார்கள்! எவ்வளவு துணிச்சலிருந்தால் 'இனி உங்கள் வீட்டுக்கே வரமாட்டேன்' என்று அவள் சொல்லியிருப்பாள் தன் தந்தையையும், அன்னையையும் பார்த்து.

இரண்டு நாட்கள் முழுதும் பாடல்வல்லானுக்கு எந்த யோசனையுமே ஓடவில்லை. மூன்றாவது நாள்தான் அவன் வெளியில் வந்து நின்றான். வெளியில் வந்து அவன் நின்று பார்த்தபோது அடுத்த வீட்டு எதிரில் ஒரு லாரி நின்றுகொண்டிருந்தது. அந்த வீட்டிலிருந்து சாமான்கள் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தன.

"மங்கையின் தந்தை சொந்த ஊரைவிட்டு, சொந்த வீட்டை விட்டுக் குடும்பத்தைப் பெயர்க்கவே மாட்டேன் என்று இவ்வளவு நாள் சொல்லிக்கொண்டே இருந்தவராயிற்றே! இப்போது ஊரைவிட்டுக் கிளம்புவதற்குஎப்படித் துணிந்தார்? இவ்வளவும் என்னால்தானே? ஓடிப் போய்ச் சொல்லிவிட்டு வந்துவிடலாமா அவர்களிடம் 'இனி நான் அந்த வீட்டுப் பக்கமே வரமாட்டேன்! இனி நான் மங்கையை ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன் என்று'

அவன் திரும்பி உள்ளறைக்கு வந்தான். அப்போதுதான் அவன் அன்னைக்கு மங்கையும் அவனும் கொண்டிருந்த பாசம் சற்றே புலப்பட்டது போலும்!

"அவர்கள் அலுவல் செய்யும் ஊருக்கே போகிருர்களாம். மங்கையின் திருமணம் முடிந்தபிறகுதான் அவர்கள் திரும்பவும் ஊருக்கு வருவார்களாம்!" யாரிடமோ சொல்வதைப்போல் எங்கோ பார்த்துக்கொண்டு அந்த அன்னை சொன்னுள் அதைத் தன் மகனிடம்.

பாடல்வல்லான் வாய்திறக்கவில்லை. அப்படியே போய் அமர்ந்தான். எதையும் அவன் பார்க்க விரும்பவில்லை என்று சொல்வதைவிட, எதையும் அவனுல் பார்க்க முடியவில்லை; எதையும் அவனுல் கேட்கமுடியவில்லை என்று சொல்வதுதான் இங்கே பொருந்தக்கூடுமோ என்னவோ! குனிந்த தலை குனிந்தவண்ணம் அவன் அப்படியே இருந்தான். எவ்வளவு நேரம் அவன் அப்படி இருந்தானே!

யாரோ விம்மி, விம்மியமுவதுபோல் அவன் காதில் கேட்டது. எதையும் கேட்கக்கூடிய நிலையிலிருந்து விலகிக்கொண்டிருந்த அவன் காதுகளால் இதை எப்படிக் கேட்க முடிந்தது? ஒரு வேளை அந்த விம்மல் ஒலி மிக அருகில் வந்து ஒலித்துக்கொண்டிருக்கின்றதோ! அவன் 'நிமிர்ந்து பார்க்கலாமா' என்று எண்ணுவதுபோல் தோன்றியது. ஆனுல் நிமிர்ந்து பார்க்கவில்லை. முடியவில்லையோ என்னவோ! கண்கள் பார்க்கும்ஆற்றலை இழந்துவிட்டனபோல் அவன் அப்படியே அமர்ந்திருந்தான்.

அவன் கால்களை நீட்டிக்கொண்டு தானே அமர்ந்திருந்தான். பாதங்களை யாரோ தொடுவதுபோல் தோன்றியது. சட்டென நிமிர்ந்து பார்த்தான். பார்க்கும் நிலையை இழந்திருந்தமை, நிமிரமுடியாமலிருந்தமை எல்லாம் பறந்துவிட்டன போலும்!

"என்னைமறந்துவிடாதே! என்னை மறந்துவிடாதே!" என்று குரல் எழுப்பினுள் அங்கே அவன் பாதங்களைத் தொட்டுக்கொண்டிருந்த மங்கை!

"மங்கை!" என்று தன்னை மறந்து உரக்கக் கூவிவிட்டான் பாடல்வல்லான். சட்டென்று காலை மடக்கிக்கொண்டான். எழுந்து நின்ருன்.

அவள் அப்படியே மண்டியிட்டு அமர்ந்திருந்தாள். "என்னை மறந்துவிடாதே! என்னை மறந்துவிடாதே!" என்ற சொற்கள் அவள் வாயினின்று வந்துகொண்டிருந்தன.

அரவம் கேட்டிருக்கவேண்டும்! பாடல்வல்லானின் அன்னை அங்கு ஓடிவந்தாள். அந்தக் காட்சி, பாடல்வல்லான் நின்றுகொண்டிருப்பதும், மங்கை அங்கே மண்டியிட்டிருப்பதுமான அந்தக் காட்சி அவள் உள்ளத்தை உருக்கிவிட்டது போலும்! அவள் அப்படியே தடுமாற்றங் கண்டு நின்ருள்.

எவ்வளவு நேரம்தான் அப்படி நிற்பாள் அவள்! அவள் மெல்ல மங்கையருகில் வந்தாள். அவளைப் பற்றினுள். மண்டியிட்ட நிலையிலிருந்து எழுந்து நிற்கவைத்தாள் அவளை. வாயிற்படி தாண்டிக் கூட்டிக்கொண்டு போனுள்! அவனும் எதனுலோ இழுக்கப்பட்டவன்போல் அவர்கள் பின் சென்ருன்.

"அழாதேயம்மா! வருந்தாதே! அன்னை, தந்தை! — அவர்கள் சொல்கின்ற வார்த்தையைத்தானே கேட்கவேண்டும். அவர்கள் சொல்கின்ற வழியில்தானே செல்லவேண்டும்! நீ புதுப்பாதை வகுக்கக்கூடாது அம்மா! பெற்ருேர்க்கு அடங்காத பெண் என்ற பெயர் வேண்டாம் அம்மா உனக்கு! அவர்கள் சொல்வதைச்சொல்! அவர்கள் செய்வதைச்செய்!"

பாடல் வல்லானின் அன்னை எப்படித்தான் அந்த வார்த்தைகளைச் சொன்னுளோ! அவள் குரல் ஒலித்த ஒலி அந்த வார்த்தைகள் அவள் உள்ளத்திலிருந்து வந்தவை அல்ல, அல்ல என்று அடித்துச் சொல்லிற்று.

அந்தச் சொற்களைக் கேட்டதும் மங்கையின் விம்மல் வெடித்துவிட்டது. அவள் ஓங்கி அழுதுவிட்டாள். கதறினுள். அந்தக் கதறல் பாடல்வல்லானின் அன்னையையும் கதறவைத்தது. 'போய் வருகிறேன்' என்று அவள் சொல்லவில்லை. 'போய்வா அம்மா!' என்று இந்த அம்மையும் கூறவில்லை; வழியனுப்பவில்லை. அவள் கதறிக்கொண்டு சென்ருள். இவள் கதறிக்கொண்டு நின்ருள். அந்தக்காட்சியைப் பாடல்வல்லான் பார்த்துக்கொண்டேயிருந்தான். அவன் பேசவில்லை. அவன் குரலெடுத்து அழவில்லை. அவன் கண்கள் குளமாயின.

அதற்குப்பின்னர் இரண்டு மூன்று நாட்களில் அவன் என்னவோ அந்த நிகழ்ச்சிகளை மறந்துவிட்டவனுக, மங்கையைப்பற்றிய எண்ணத்தைத் தன் மனத்திலிருந்து அடியோடு அகற்றிவிட்டவனுகத் தான் தன்னைக் காட்டிக்கொண்டான். வெளியில் உலவிவந்தான். ஆனுல், அவன் அன்னை அதை அவளை இன்னும் மறக்கவில்லை. பின்னும் மறக்கமாட்டாள்.

மங்கைமட்டும் அவனை, அவர்களை மறந்துவிட்டாளா என்ன! கிழமை தவறினுலும் அவளுடைய முடங்கல் தவறுவதில்லையே! ஒவ்வொரு தடவையும் அவன் அன்னை தான் அந்த முடங்கலைப் படித்துக் காட்டுவாள். அவன் எதையோ கேட்பதுபோல் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, வாளா சென்றுவிடுவான்.

'ஆமாம், இந்தச் சமயத்தில் இந்த நினைவெல்லாம் எதற்கு வருகின்றன.

எல்லாவற்றையும் மனத்திரையில் ஒன்றுவிடாமல் ஓட்டிப் பார்த்துவிட்டு, முடிவில் அவன் தன்னைத் தானே அப்படிக் கேட்டுக்கொண்டான்.

'உம்! எப்படியோ நேரம்கழிந்ததே! உடல்வலி தோன்ருமலிருந்ததே! அந்த மட்டும் நல்லதுதான்' அவன் நெடுமூச்செறிந்து கொண்டான்.

திரும்பவும் அவன் உடல் வலியை உணர்ந்தான். கட்டாந்தரை உறுத்துவதை உணர்ந்தான். காயங்கள் எல்லாம் பெருகிய வேதனை தருவதை உணர்ந்தான்.

(தொடரும்)

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

பொறுப்பாளர்.

வாத்தியாரம்மா

—[இரா, சீனுவாசன்]—

அமைதியின் உறைவிடமாகவுள்ளவர் என்று பெயர் எடுத்த பெரியதம்பி தனது மாடியறையில் புத்தக அலமாரியிலுள்ள புத்தகங்களில் திருக்குறளைக் கையில் எடுத்து மூக்குக் கண்ணாடியைத் துடைத்து அணிந்துகொண்டு, அதில் தன்னுடைய கருத்து முழுவதையும் செலுத்திக்கொண்டிருந்தார்.

அவரிடம் எளிமையும், தண்மையும், கனிவும் குடிகொண்டிருந்தன.

ஊரில் ஏற்படும் எந்தத் தகராருயினும், அது, கணவன்—மனைவி சண்டையாயினும் சரி, கொடுக்கல் வாங்கல் சச்சரவாயினும் சரி, வரப்பு வாய்க்கால் சண்டையாயினும் சரி, அவரை நாடித்தான் எல்லாரும் வருவார்கள். அவரும் நடுநின்று தீர்ப்புக் கூறி, வந்தவர்கள் ஒருவருக்கொருவர் தோளில் கை போட்டுக் குதூகலமாகச் செல்லும் நிலைமையை உண்டாக்கிவிடுவார்.

தெருக்கோடியில் — பெரிய தம்பியின் வீட்டுக்கருகாமையில் இருந்த ஆரம்பப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக வளர்ந்து, கல்லூரியாக உருப்பெற்றதென்றால், அதற்குப் பெரியதம்பியே மூலகாரணமாவார் என்று சொல்லுவது மிகைபடக் சொல்வதாகாது. அவரது பெரு முயற்சியாலும் பேருழைப்பாலும்தான் அது கல்லூரி வடிவினைப் பெற்றது.

குறளில் தன் நெஞ்சைப் பறிகொடுத்து வேறு எந்த நினைப்பும் இல்லாத நிலையில் இருந்தபோது, கலாசாலைத் தலைமை ஆசிரியர் சின்னத்துரை உள்ளே வந்தார். பெரியதம்பி எழுந்து சென்று, வரவேற்று எதிரே இருந்த இருக்கையில் அமரச் செய்தார், இருவரும் நீண்ட நேரம் கலாசாலையின் நலங் கருதியும், பாடத் திட்டங்களைப்பற்றியும் உரையாடிக்கொண்டிருந்தனர்.

கலாசாலையின் ஆண்டு விழாவை இந்த ஆண்டு இறுதியில் கொண்டாடுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் கவனிக்க ஒரு குழு அமைக்க வேண்டும்'' என்றார் சின்னத்துரை. தலை அசைப்பின் மூலம் அவரது கருத்தை ஆதரித்துவிட்டு, ஆடல், பாடல், நாடகம் எல்லாம் நன்முறையில் அமைவதோடன்றி, மாணவர்களும் போதிய அளவுக்கு அந்நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ள வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற தன் கருத்தையும் செப்பினார் பெரியதம்பி.

“மணிமேகலை இங்கு தற்சமயம் வேலையில் இருந்தால் நமக்கு அதிக அளவுக்குச் சிரமம் இருக்காது'' என்றார் சின்னத்துரை.

பழைய கதைகளையெல்லாம் ஏன் இப்போது கிளறுகிறீர்கள்?'' என்று சொல்லியவாறே பெரியதம்பி மெல்லக் கடிந்துகொண்டார்.

அவரது இயல்பை அறிந்த சின்னத்துரை அதோடு அந்தப் பேச்சுக்குப் புள்ளி வைத்துவிட்டு, உரையாடலை வேறு திசைக்குத் திருப்பினார். சிறிது நேரத்தில் சுவர்க் கடிகாரம் ஓசை செய்தது. படைத் தளபதியின் கட்டளையைச் செயலாக்கும் வீரன்போல அவரும் விடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்.

சின்னத்துரையை வாசல்வரை சென்று வழியனுப்பிவிட்டுப் பெரியதம்பி கூடத்திலிருந்த சோபாவில் அமர்ந்தார்.

சுவர்க் கடிகாரத்தின் துடிப்பு, அவருக்கு எதிரே இருந்த மின் விசிறியின் வாயுவேகச் சுழற்சி, முகாரி இராகத்தை ஆலாபனை செய்துகொண்டிருந்த வானொலிப் பெட்டி, நிலையாக இல்லாது இப்படியும் அப்படியுமாக மெல்ல ஆடிக்கொண்டிருந்த உத்திரத்தில் தொங்கவிடப்பட்ட ஊஞ்சல் ஆகிய எல்லாம் அவரது மனதை வதைசெய்வதுபோலத் தோன்றின.

சுடலையில் கிடத்தி வைத்த பிணத்தின்மீது களிமண்ணால் பூசப்பட்ட, பிறகு புகை மெல்ல வெளிக்கிளம்புவதுபோல அவரது நெஞ்சிலிருந்து இறந்தகால நிகழ்ச்சிகள் மெல்ல வெளிவந்தன.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு தன் கலாசாலைக்கு ஒரு ஆசிரியர் தேவை என்று தினப்பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தார். பேட்டிக்காக ஒரு பட்டாளமே கலாசாலை அலுவலகத்தில் முற்றுகையிட்டது. வந்திருந்த அவ்வளவு பேரிலிருந்தும் தகுதி வாய்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுப்ப தென்பது பெரியதம்பிக்கும், சின்னதுரைக்கும் பெரிய தலைவலியாக இருந்தது. பேட்டி ஆரம்பமாயிற்று. ஒருவர் பின் ஒருவராக அறைக்குள் அழைக்கப்பட்டார்கள். சிலரிடம் துருவித் துருவிக் கேள்விக் கணைகளைச் சின்னதுரையும் பெரியதம்பியும் மாறி மாறித் தொடுத்தார்கள். சிலரிடம் ஏதாவது கேட்க வேண்டுமே என்ற சம்பிரதாயத்துடன் ஏதோ கேட்டார்கள். பகல் ஒரு மணி ஆயிற்று உணவுக்காகக் கலைந்தனர்.

மீண்டும் மூன்று மணியளவில் பேட்டி தொடர்ந்தது. பெரியதம்பி மேசையின்மீதிருந்த மணியைத் தட்டினார். ஒடிந்து விழுவதுபோல ஒரு உருவம் பெண்ணுருவில் எதிரே வந்து நின்றது.

திரையுலகத்துத் தாரகையா, கல்லூரி மாணவியா என்பதைக் கண்டு அறிந்துகொள்ளமுடியாத நிலையில் ஆடைப் பஞ்சத்தில் அடிபட்டவர்கள்போலத் தங்கள் உடலை ஒப்பனையால் திரையிட்டு, கோயில் மாடா, மேய்ப்பானில்லாத ஆடுகளா என்று எண்ணுகின்ற அளவுக்குத் தெரு வீதியில் நடைபோடுவோர் வரிசையில் நிற்கிற அளவுக்கு அவளிடம் அலங்காரமில்லை. அழகு இருந்தது. அதுவும் வண்ணக்குழம்பில் மறைந்திருக்கும் சித்திரம்போல வெளிக்குத் தெரியாத அளவுக்கு வறுமையோடு ஆலிங்கனம் செய்துகொண்டிருந்தது.

“உன் பெயர்?''

“மணிமேகலை''

"சொந்த ஊர்"

"பொன்மலை"

பிறந்தது பொன்மலையில், வாடுவது வறுமையில் என்று எண்ணியவாறே சின்னத்துரை மெல்ல முறுவலித்தார்.

பெரியதம்பி தன் கையை நீட்டினார். தன் கையில் வைத்திருந்த சான்றிதழ்களை அவரிடம் கொடுத்தாள். அவைகளைப் பரிசீலனை செய்துகொண்டே அவரும், சின்னத்துரையும் மாறிமாறிக் கேள்விகள் கேட்டார்கள். மணிமேகலையின் பதில்கள் அவர்கள் மனதை நிறைவு செய்தன. மணிமேகலையின் எளிமை பெரியதம்பியின் மனதைக் கனியச் செய்தது.

"சரி போகலாம்" என்று பெரியதம்பி தலையை அசைத்தார். மிகுந்த அடக்கத்தோடு இருவரையும் கரங்கூப்பி வணங்கிவிட்டு அறையிலிருந்து வெளியே வந்தாள்.

வேனிற்கால விடுமுறைக்குப் பிறகு கலாசாலை ஆரம்பமாயிற்று. மணிமேகலை கலாசாலையின் ஆசிரியையாக நியமிக்கப்பட்டாள். கடிகாரத்தைப் பார்த்து வேலை செய்வது, காலண்டரைப் பார்த்துச் சம்பளம் வாங்குவது என்பதையே பிறவிக் குணமாகக் கொண்ட சிலரைப் போல அல்லாது, தனக்குக் களைப்பு மேலிடுகிறவரை தன் கடமையை அனுதினமும் செய்துவந்தாள். அவள் மாணவர்களிடம் பழகும் முறையும், பாடம் கற்பிக்கும் பாங்கும் மிகக் குறுகிய காலத்திலேயே அவர்கள் உள்ளங்களில் அவள் இடம் பெறக் காரணமாக இருந்ததில் வியப்பில்லை. சின்னத்துரையும் பெரியதம்பியும் அவள் பணிகண்டு பாராட்டாமலில்லை.

அது அவளை முன்னிலும் பன்மடங்கு தன் கடமையைச் செம்மையாகச் செய்யப் பேரூக்கத்தைத் தந்தது. இந்தப் போக்குக் கண்டு அவளது சக ஆசிரியர்களின் நெஞ்சு மெல்லமெல்ல நாளுக்கு நாள் பொறாமையால் விம்ம ஆரம்பித்தது.

தமிழரசன் பெரியதம்பியின் ஒரே மகன். பட்டாளத்து வீரன்போல் உடற்கட்டும், பரவசம் தவழும் முகமும் கொண்ட அவனுக்கு வயது இருபதுக்கு மேலிருக்காது. வறுமையோ, பிணியோ, வாட்டமோ, இதுகாறும் அணுகாததால் அவனது தோற்றத்தை இயற்கை சற்று மிகைப்படுத்தியே காண்போர் கண்களுக்கு விளம்பரப்படுத்தியது. தந்தையின் தள்ளாமையால் அவர் அருகிலிருந்து காரியமாற்றவேண்டித் தன் படிப்பை பி. ஏ. யோடு முடித்துக்கொண்டான்.

அந்த ஆண்டு கலாசாலைவெள்ளி விழாவுக்கான எல்லா ஏற்பாடுகளும் துரிதமாக ஏற்பாடாகிக் கொண்டிருந்தன. விழாவையொட்டி ஒரு கண்காட்சியும் ஏற்பாடாயிற்று.

தமிழரசனிடம் கண்காட்சியின் பொறுப்பை ஒப்படைத்தார் சின்னத்துரை. மணிமேகலையின் ஆற்றலில் நம்பிக்கைகொண்ட சின்னத்துரை அவனோடு உடனிருந்து பணியாற்ற அவளை நியமித்தார்.

உறக்கம், ஓய்வு எல்லாவற்றையும் ஒருபுறமாக ஒதுக்கிவைத்துவிட்டுக் கண்காட்சியைக், கவினும் பயனும் உள்ளதாய் ஆக்கிவிடும் முயற்சியில் இருவரும் ஈடுபட்டனர்.

விழா ஆரம்பமாயிற்று. ஊர்மக்கள் அனைவரும் திரளாக வந்து கண்டு களித்தனர். கண்காட்சிப் பகுதியில் நுழைந்துவிட்டு வெளியே வரும்போது ஒரு கலாசாலையில் பாடம் கேட்டுவருவது போன்ற உணர்வோடு வந்தனர். அவனும் அவளும் பார்வையாளர்களுக்கு ஏற்படும் ஐயம் திரிபுகளை விளக்கிக் கூறும் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

கோயில்களில் கற்பூரவிளக்குக் காட்டும்போது கவனத்தை வேறு பக்கம் சுழலவிடும் குறும்புக்கார இளைஞர்கள்போல் கண்காட்சியைக் கண்டு களித்த சில கண்கள் அந்த இருவரது தோற்றத்தையும், பார்வையையும் இணைத்து ஏதோ ஒரு கணக்கைப் போட்டன.

வெள்ளிவிழாவில், கண்காட்சியின் மூலம் இருவருக்குமிடையே ஏற்பட்ட தொடர்பு, அதோடு கருகிவிடவில்லை. மாருக நேரம் கிடைக்கும் போதெல்லாம் மணிமேகலையின் வீட்டுக்குத் தமிழரசன் சென்று வருவதைத் தன் அன்றாடக் கடன்களில் ஒன்றாக ஆக்கிக்கொண்டதால், நாளடைவில் அவர்களிடையே ஏற்பட்ட தோழமை தங்கம்போலப் பிரகாசிக்கத் தொடங்கியது.

அக்கம்பக்கம் இருப்பவர்களின் முணுமுணுப்பு அவர்களது செவிப் புலனைத்தொட்டது. உடன் பணிபுரியும் ஆசிரியர்களின் உதட்டோடு இந்தப் பிரச்சினை ஒட்டிக்கொண்டிருந்தது. வெறுவாய்க்கு அவல் கிடைத்ததுபோல நேரங்காலங் கூடப் பார்க்காமல் அசைபோட ஆரம்பித்தார்கள். மணிச்சரத்தில் நூல் தெளிவாகத் தெரிவதுபோல மணிமேகலைக்கும் தமிழரசனுக்கும் நிலைமைகள் தெளிவாகப் புரிந்தன. எனினும் தங்கள் போக்கில் அந்த இருவரும் எத்தகைய மாற்றத்தையும் விரும்பவில்லை.

இந்தச் சேதி நாளடைவில் பஞ்சுப் பொதியில்பட்ட சிறிய தீப்பொறிபோலப் புகைந்தது. தென்றலோடு கலந்து அந்தப்புகை கலாசாலை முதல்வர் சின்னத்துரையின் நாசித்துவாரத்தை அடைய அதிக நாள் பிடிக்கவில்லை.

"மணிமேகலை பண்புள்ளவள். அவள்மேல் பொருமைகொண்டவர்கள் கட்டிவிட்ட கதையே இது" என்ற தனது நம்பிக்கையை அவர் சிறிதளவுகூடத் தளர்த்திக்கொள்ளவில்லை. ஒருநாள் பெரியதம்பியிடம் பேசிக்கொண்டிருக்கும்போது பேச்சோடு பேச்சாக இந்தச் சேதியை அவர் காதில் போட்டுவைத்தார்.

உண்மை முலாம் பூசப்பட்ட வல்வழக்குகள் பலவற்றைத் தன் வாழ்நாளில் கண்ட பெரியதம்பி இதுவும் அந்த இனத்தைச்சேர்ந்ததே என்ற முடிவுக்கு எடுத்த எடுப்பிலேயே வந்துவிட்டார்.

தன் தலைமைக்காலத்தில் தனது ஒவ்வொரு செயலும் கலாசாலைக்குப் பெருமையைத் தேடிதருவதாக இருக்கவேண்டும் என்ற குறிக்கோளைத் தத்துவமாகக்கொண்டு கடமையைச் செய்துவந்ததால் குற்றங்கண்டவிடத்து எவரையும் தண்டிக்கத் தவறியதில்லை.

மணிமேகலையைப்பற்றி அவர் நெஞ்சில் நல்லெண்ணமே குடிகொண்டிருந்தது. தமிழரசனை, பிள்ளைப் பருவத்திலிருந்தே அறிந்திருந்ததால் அவனது பண்பைத் தரக்குறைவாகக் குறைத்து எடைபோட நடுநிலைமைக்கு இலக்கணமாக இருந்த அவரது மனம் இடந்தரவில்லை.

எனினும், ஆதி மனிதனது உருவத்திற்கு நினைவுச் சின்னமாக விளங்குவது அல்லவா மனம்? பசுமையான மரத்தை வண்டு குடைவதுபோல அவரது மனதை இந்தப் பிரச்சினை குடைந்து கொண்டே இருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. மணி ஐந்திருக்கும்; வெளியே உலாவப்புறப்பட்டார். இரண்டுதெருவைக் கடந்த பிறகு ஒரு நாலு தெருக்கள் கூடுமிடம்; அங்கே ஒரு கணம் நின்று தன் கழுத்தை வளைத்தார். தன் கண்களுக்கு எதிரே விளங்கிய சிறிய மாடி வீட்டின் வெளிச் சுவரில் ஒரு பெயர்ப் பலகை காட்சி

யளித்தது. கண்ணுடியைச் சரி செய்துகொண்டு தன் பார்வையைக் கூர்மையாக அதன்மீது பாய்ச்சினுர்.

மணிமேகலே; பி. ஏ. பி. டி.—என்ற எழுத்துகள் முத்து முத்தாகத் தெரிந்தன. சிறிது நேரம் அங்கேயே நின்ருர். பிறகு அந்த வீட்டின் உள்ளே மெல்லக் காலெடுத்து வைத்தார்.

முன் கூட்டத்தில் ஒருவருமில்லே. அருகிலிருந்த மாடிப்படி வழியாக மேலே சென்ருர்.

மணிமேகலே மாணவர்கள் எழுதிய கட்டுரைக் குறிப்புகளேக் கலர்ப் பென்சிலினுல் திருத்திக் கொண்டிருந்தாள். தமிழரசன் எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அவளோடு பேசிக்கொண்டிருந்தான். பென்சிலின் கூர்மை மழுங்கிவிட்டதால் கத்தியால் பென்சிலேக் கூர்மைப்படுத்திக்கொண்டிருந்தாள். ஒரே நேரத்தில் தன் கவனத்தைப் பென்சிலின்மீது பாதியும், அவனது பேச்சில் பாதியுமாகத் திருப்பியதால் அவனேயும் அறியாமல் கத்தி அவளது வெள்ளரிப் பிஞ்சு போன்ற விரலேப் பதம் பார்த்துவிட்டது. விரலிலிருந்து இரத்தம் சொட்டுவதைக் கண்ட தமிழரசன் எழுந்து சென்று ஒரு துணியைக் கிழித்து அதைத் தண்ணீரில் நனேத்துப் பிழிந்து காயம் பட்ட விரலில் சுற்றிக் கொண்டிருந்தான்.

மாடியிலிருந்த சின்னத்துரை அந்த அறையிலுள்ள பாதி மூடியும், பாதியளவுக்கு மூடாமலும் இருந்த பலகணியின் இடுக்கு வழியாகப் பார்த்தார்.

அடுத்த விநாடி அவரால் அங்கே நிற்க முடியவில்லே. முகத்தை எட்டுக் கோணலாக்கிக் கொண்டு கீழே இறங்கி தெருவுக்கு வந்துவிட்டார். சின்னத்துரை பலகணிக் கம்பிகளுக்கிடையே உள்ள இடைவெளி வழியாக அரைகுறையாகப் பார்த்த இந்தக் காட்சி அவரை விபரீதமான முடிவுக்கு வெகு துரிதமாகத் துரத்திவிட்டது.

இந்த நிகழ்ச்சியை மறுநாள் காலேயே பெரியதம்பியின் வீட்டிற்குச் சென்று விவரித்தார். துருவப் பிரதேசத்தின்குளுமையைஉமிழ்ந்து கொண்டிருந்த அவரது விழிகள் நெருப்புக் கோளமாக மாறின.

“நடத்தை கெட்டவள்; கழுத்திலே தாலிவேறு”—சின்னத்துரை சலித்துக் கொண்டார்.

“இன்னும் கொஞ்சநாள் இங்கு அவள் இருந்தால் பள்ளிக்கூடத்து மரங்களிலேகூட ஈ, காக்கை வந்து உட்காராது” என்ருர் பெரியதம்பி.

காலேக் கடன்களே முடித்துவிட்டு அப்போது அந்தப் பக்கமாக வந்தான் தமிழரசன்.

“ஒரே பிள்ளே, ஒரே பிள்ளே என்று அளவுக்கு மீறிச் செல்லங்கொடுத்த தன் பலனே இப்போதுதான்டா அனுபவிக்கிறேன்.” எதுவும் புரியாத நிலேயில் தன் முகத்தைக் கேள்விக்குறியாக்கிக்கொண்டு குத்துக்கல்போல அங்கு நின்றுகொண்டிருந்தான் தமிழரசன்.

“டேய் இனிமேல் நீ அந்த “வாத்திச்சி” வீட்டுப்பக்கம் போகக்கூடாது” என்ருர் பெரியதம்பி தன் மகனே மிகுந்த கண்டிப்பான குரலில்.

“அப்பா சொல்வதெல்லாம் உன் நன்மைக்குத்தான், நீ போய் உன் வேலேயைக் கவனி” என்ருர் சின்னத்துரை.

அந்த இடத்தைவிட்டு மெல்ல நகர்ந்தான் தமிழரசன்.

“இனியும் இப்படியே விட்டுக்கொண்டுபோனுல் நாளேக்கு நாம் தெருவிலே நிமிர்ந்து நடக்கமுடியாது” என்ருர் சின்னத்துரை.

ஒரு விலகல் கடிதம் எழுதி, அவளிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு கணக்கைத் தீர்த்துவிடுங்கள். அவள் இந்த இடத்தைவிட்டு நகர்ந்தால் போதும்.”

அவர் உத்தரவை அமுல் நடத்துவதில் நானும் தயக்கம் காட்டப் போவதில்லே என்பதற்கு அறிகுறியாக சின்னத்துரை தன் தலேயை அசைத்தார்.

கலாசாலேக்கு ஒரு வாரம் விடுமுறை விட்டிருந்ததால், தனக்கு மறந்துபோன தையற்கலேயை நினேவுக்கு கொண்டுவருவதற்காக வர்ணநூலே ஊசியில் கோர்த்து ஒரு துணி விரிப்பில் தைத்துக்கொண்டிருந்தாள். யாரோ வரும் காலடியோசை கேட்டது. நிமிர்ந்து பார்த்தாள் கலாசாலே வேலேயாள் தலேமை ஆசிரியர் கொடுத்ததாகச் சொல்லி ஒரு காகித உறையைஅவளிடம் நீட்டினுன். வழக்கத்துக்கு மாருக இருந்ததால் ஒரு விஞடி வியப்பில் ஆழ்ந்தவாறே அதனேப் பெற்றுக்கொண்டாள்.

அடுத்த விநாடிஅந்த உறையைப் பிரித்தாள். சலவை செய்யப்பட்டது போன்ற ரூபாய் நோட்டுகள் கீழே சிதறின. அவைகளே எடுத்து ஒழுங்காக அடுக்கிவைத்து விட்டுப் புதிதாகச் செய்யப்பட்ட ஊர்தியை வெள்ளோட்டம் பார்க்கும்போது நிதானமாகவும், கவனமாகவும் இயக்கிச் செல்வதுபோல் சிறிதும் பரபரப்புக் காட்டாமல் கடிதத்தைப் படிக்கத்தொடங்கினுள். அவளே விரும்பி வேலேயை விட்டு, விலகிச் செல்வது போன்ற ஒரு விலகல் கடிதம்எழுதிஅதன்கீழே கையெழுத்துப் போடும்படியாகவும், கலாசாலே ஒழுங்கு முறைகளில் இருந்து வழுவித் தமிழரசனுேடுகொண்ட தொடர்பால் கலாசாலேயின் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தியதாகக் கடுமையான கண்டனத்தையும் அத்தோடு இணைத்து அனுப்பி இருந்த மற்றொரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கடிதத்தைப் படிக்கும்போது உள்ளத்திலிருந்து வெளிக்கிளம்பிய உணர்ச்சி அழுகையாக மாறிற்று. மேசையின்மீது தன் தலேயைக் கவிழ்த்துக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதாள். அன்றிரவு அவளுக்கு நித்திரையும் பகையாகிவிட்டது. ஏற்றத்தாழ்வான உயரமுள்ளவர்கள் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கைத் தூக்கினுல் பல்லக்கு, இப்படியும் அப்படியும் அசைந்து ஆடுவது போல அவள் நெஞ்சு அலேக்கழிக்கப்பட்டது.

தங்கத் தாம்பாளம்போல் எழு ஞாயிறு எழிலேவாரி இறைத்தது. சிறிது நேரத்தில் புள்ளினங்கள் எழுப்பிய பண் அமைதியைக் கிழித்துக்கொண்டு தென்றலேத் தழுவிக் கொண்டது.

படுக்கையை விட்டு எழுந்த மணிமேகலே விழிநீரால் உப்புக்கோடிட்ட தன் முகத்தைச் சுத்தம் செய்து கொண்டு மேசைக்கு அருகில்வந்து அமர்ந்தாள். விலகல் கடிதத்தில் தன் கையெழுத்தைப் போட்டு அதனே ஒரு உறையில் இட்டு தலேமை ஆசிரியர் முகவரியை எழுதினுள்.

கலாசாலே நிர்வாகிக்கு நீண்ட கடிதம் ஒன்றைத் தன் நிலேமையை விளக்கி எழுதிவிட்டுப் பெருமூச் செறிந்தாள் மணிமேகலே.

அருகிலிருந்த கிராமத்திற்குச் சென்றுவிட்டுத்தெருவிளக்குஏற்றிய நேரத்தில் பெரியதம்பி வீட்டின் உள்ளே நுழைந்தார். தன் உடுப்புகளேக் களேந்துவிட்டு ஆயாசத்தோடு அருகிலிருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்தார். வழக்கம் போல் அன்றைக்கு, வந்த தபால்களே அவருக்கு எதிரே இருந்த

மேசையின் மீது வேலைக்காரன் வைத்துவிட்டுப்போனான். ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டிருந்த அவர், ஒரு, காகித உறையைக் கையிலெடுத்தார். அதிக அளவுக்கு, காகிதங்களை மடித்து அதனுள் வைத்திருந்ததால் அது கனத்தது. முகவரியைப் பார்த்ததுமே இது மணிமேகலையின் எழுத்து என்பதைக் கண்டுகொண்ட பெரியதம்பி மிகுந்த வெறுப்புணர்ச்சியோடு, நெற்றியில் சுருக்கங்களை வரவழைத்துக்கொண்டு படிக்கலானார்.

மாண்பு அமைந்த பெரியவரே,

நலம் வேண்டுகிறேன். உணர்ச்சிவசப்படாமல் பெண்மையையும், நாணத்தையும் இந்தக் கடிதம் எழுதி முடிக்கிறவரை ஒருபுறமாக ஒதுக்கி வைத்துவிட்டு இந்த நீண்ட மடல் மூலம் என் இதயத்தைத் திறந்து காட்டுகின்றேன்.

வாழ்க்கைப் பாதையில் ஒருவனும் ஒருத்தியும் சந்தித்தால் அந்தச் சந்திப்புக் காதலாகத்தான் இருக்கும் என்று அவசரப்பட்டு அழுத்தமான முடிவுக்கு இந்தச் சமுகம் வந்துவிடுகிறது. எனது நிகழ்கால ஏழ்மை என்னையும், தமிழரசனையும் இணைத்து அங்ஙனமெல்லாம் எண்ணத் தூண்டியதில் தவறில்லை. இந்த அபலையின் கதையைத் தொடர்ந்து கேளுங்கள்.

குபேரபுரியினரின் கைலாகு, குதூகலமான வாழ்வு இத்தனைக்கும் மத்தியில் குடும்பத்துக்கு ஒரே பெண்ணாக இருந்து வளர்ந்தவள் நான். அழகும் திருவும் கரங்கோத்து நடம்புரிந்தது எங்கள் இல்லத்தில். பெண்மைக்கு இலக்கணம் அடக்கம் என்றாலும், அடைகாக்கும் கோழியைப் போல வீட்டிலேயே அடைத்து வைக்கவில்லை என்னை—பெற்றோர்.

கல்லூரியில் காலெடுத்துவைத்த சமயம் எழிலின் முழு உருவாக நானிருந்தேன். காசநோய்க்காரன் உமிழ்ந்த எச்சிலைச் சுவைக்கின்ற ஈக்கள் கூட்டம்போலக் காளையர் விழிகள் என் உடலைமொய்த்தன.

நட்டுவனாரின் ஜாலராத்தட்டிற்கு ஏற்பச் சதிராடும் நங்கையர்போல வெளி உலகக் கவர்ச்சியினைக் கண்டு என் உடலுணர்ச்சி அணுக்கள் நடம்புரிந்தன. பனிக்கட்டியின் மீது தூவிய மரத்தூள் பனிக்கட்டியிலுள்ள வெப்பத்தை வெளியே விடாமலும், வெளி வெப்பத்தைத் தான் ஏற்றுக்கொள்ளாமலிருந்து பனிக்கட்டியைக் கரையாது பாதுகாப்பதுபோல நானும் மிகுந்த அடக்கத்தோடிருந்து, உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த தாபத்திற்கு என் உடலை அடிமையாக்கிவிடவில்லை.

ஆசிரியர் தேர்வுக்கான பயிற்சியை முடித்துவிட்டு வீட்டிலிருந்த சமயம், படிப்புப் படிப்பு என்று என் பருவத்தையே பாழாக்கிக்கொண்டதால் கொஞ்சம் பொலிவு குன்றி இருந்தேன். திருமணத்தை வாணிபமாகக் கருதும் இக்கால இளைஞர்களின் கண்களுக்கு அது பெரிய குறையாகத் தெரியவில்லை. உழுத்துப்போன தானியத்தை முறத்திலிட்டுப் புடைத்துச் சலித்தெடுத்திடும் பழங்காலப் பாட்டிபோல ஆழ்ந்து நிதானித்து ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர் கையில் என்னைப் பிடித்துக்கொடுத்தார் என் தந்தை.

கட்டிய மஞ்சள் கயிற்றின் ஈரம் கூடச் சரியாக உலரவில்லை. பால் செம்போடும், பழத்தட்டோடும் படுக்கை அறைக்குள் என்னைப் பிடித்துத் தள்ளினார்கள் என் தோழிகள். பெண்மையும் நாணமும் எனக்கும் அவருக்கும் சுவராய் இருந்ததால் என் கழுத்தை ஒருபுறமாக வளைத்துப் பார்வையைத் தரைமீது செலுத்தினேன். அவர் என் அருகே வந்தார். குறைந்த அழுத்தமுள்ள மின்னோட்டத்தைத் தீண்டியவளின் அனுபவத்தை அன்றுதான் முதன் முறையாகப் பெற்றேன். எனது கழுத்துப் பக்கத்தையே கூர்ந்து கவனித்தார். மிகுந்த சலிப்புணர்ச்சியோடு கட்டிலில் டோய்ப்படுத்து தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டார்.

அறைக்கதவு மூடி இருந்தது. என் விழிக்கதவுகள் மூடவில்லை. மயான அமைதி. ஏற்றிவைத் திருவிளக்கு எண்ணெய் இல்லாக் குறையால் எரிதழல் பஞ்சுத்திரியைக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கிக்கொண்டிருந்தது. அறைப் புழுக்கத்தால் முகத்தில் ஊற்றெடுத்த வியர்வை நெற்றியிலிருந்த குங்குமத்தைச் சேருக்கிவிட்டது.

இரவு முழுவதும் விழித்தகண் மூடாமல் அவர்கால்மாட்டிலேயே தேக்கு மரத்தாலான கட்டில் சட்டத்தைப்பற்றியவாறு சிலைபோல கால்கடுக்க நின்றுகொண்டிருந்தேன்.

இரவெல்லாம் விழித்திருந்ததால் என்னையும் அறியாமல் பொழுது மலரும் நேரத்தில் என் இமைகள் மூடிக்கொண்டன. நேரங்கழித்து எழுந்திருந்த நான் அறைக்கதவு திறந்திருப்பதைக்கண்டேன். அதிகாலையிலேயே படுக்கையிலிருந்து அவர் எழுந்து வெளியே சென்றுவிட்டார், என்று யூகித்துக்கொண்டேன். கீழே ஒரே கூச்சலாக இருந்தது. அடிதடி அமளி நடக்கிற அளவு கூச்சல் உச்சக்கட்டத்தை எட்டிவிட்டது. மாடிப்படி ஏறி யாரோ வரும் ஓசை கேட்டது. வேலைக்காரி காளியம்மாள்கையைப் பிசைந்துகொண்டு என் எதிரே நின்றாள்.

“கீழே என்ன ஒரே கூச்சல்” என்றேன். பதிலில்லை. அவளோ முந்தானையால் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு கவலைக் கோடுகள் பரவிய தன் முகத்தில் இரக்கத்தின் சாயலை வரவழைத்துக்கொண்டு என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். மீண்டும் வற்புறுத்தவே “மாப்பிள்ளைக்கு உன்னைப் பிடிக்கவில்லையாம், உன் கழுத்துப் பக்கத்தில் இருக்கிற தழும்பு பெரு வியாதியின் அறிகுறியாம், நம்ம ஐயா அவரை ஏமாற்றி உன்னை அவர் தலையில் கட்டி வைத்து விட்டாராம்” என்றாள்.

அவள் சொல்லி முடிப்பதற்குள் என் தந்தை என்னை அழைப்பதாக வேறொருத்தி என்னை மாடியிலிருந்து கீழே அழைத்துப் போனாள். எங்கள் வீட்டுக்கு எதிரே வசித்துவந்த பெண் டாக்டர் என்னை அறைக்குள் அழைத்துப் போய் எனது கழுத்துப் பக்கத்திலிருந்த தழும்பைச் சோதனைச் செய்து பார்த்தார்கள். நடந்துகொண்டிருக்கும் அமளியில் என் கவனம் சென்றது. பிள்ளை வீட்டாரின் பேச்சில் கண்டிப்பும் அதிகாரமும் கலந்திருந்தது. என் தந்தையோ பணிந்தும் குழைந்தும் பேசினார்.

“போயும் போயும் என் மகனுக்கு உன் வீட்டில் பெண் எடுத்தேனே! என் புத்தியை......! சகதி என்று முன்பே தெரிந்திருந்தால் இந்த இடத்தில் நான் காலையே வைத்திருக்கமாட்டேன்” என்றார் என் மாமனார்.

“என் மகன்தானா ஐயா உனக்கு அகப்பட்டான். என் தலையிலே பார்த்துத்தானா நீ கை வைக்க வேண்டும்” என்று அவர் முழங்கினார்.

என்னைச் சோதனை செய்த டாக்டர் கூட்டத்தினரிடையே வந்து “அந்தத் தழும்பு தொழு நோயின் அறிகுறியல்ல, அது வெண் குட்டம். இப்போதுதான் ஆரம்பநிலை. வெண்குட்டம் என்பது சருமத்தின் நிறமாற்றமே தவிர, வேறொன்று

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15
இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மில்லை. தடுப்பு ஊசி போட்டால் மறைந்துவிடும். இதனால் தாம்பத்திய வாழ்க்கைக்கு எத்தகைய கெடுதலும் இல்லை'' என்ற கருத்தினை மேல்நாடு சென்று மருத்துவம் கற்றுவந்த அந்த அம்மையார் கூறினார்கள்.

அந்த அம்மையாரின் பேச்சுக் காற்றோடு கலந்தது. என் தந்தை பிள்ளை வீட்டாரை எவ்வளவோ வற்புறுத்தியும், காலைப்பிடித்துக் கெஞ்சியும் உருப்படியான பலன் ஏற்படவில்லை.

பிள்ளை வீட்டார் அத்தனை பேரையும் சுமந்துகொண்டு ஊர்தி பறந்தது.

தொட்ட காரியம் அத்தனையும் அடுக்கடுக்காகத் தோல்வியையே தந்தாலும், அவற்றை அணைத்துக்கொண்டு மனம் கலங்காது நெஞ்சைக் கல்லாக்கிக்கொண்டு படைவீரன்போல நடைபோடும் என் தந்தை ஆமைபோல் அடங்கித் தன் உடலைச் சாய்வு நாற்காலியில் சாய்த்துக்கொண்டார்.

பந்தல் வாயிலில் கட்டியிருந்த வாழை மரத்தின் பட்டைகளைப் பிய்த்துச் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். குதூகலம் தவழ்ந்த இல்லம் சா வீடுபோல் காட்சி அளித்தது.

சுவரில் மாட்டியிருந்த தேதிப் படம் தன் கடமையைத் தவறாது செய்ததால், இளைத்துப்போயிருந்தது. குடமுழுக்குச் செய்த அன்றிரவே கோபுரத்துக் கலசத்தில் இடி விழுந்ததுபோல ஆகிவிட்ட தன் மகளின் நிலைகண்டு அவர் நெஞ்சம் நைந்தது.

வணிகத் துறையில் ஏற்பட்ட மந்தம் அவரது விழிப் பார்வையை மங்க வைத்துச் சிவில் கோர்ட்டில் நடந்த வழக்குகளின் தீர்ப்பு அவருக்கு அனுகூலமான சூழ்நிலையைத் தேடித் தராததால், அவர் ஈட்டிய சொத்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைய ஆரம்பிதத்து.

நீர்வற்றிய காலத்தில் பிறிதோர் நீர்நிலையை நாடிச் செல்லும் நீர்ப்பறவையைப்போல என் தந்தையின் நிழலில் வாழ்வை வளமுள்ளதாக ஆக்கிக் கொண்டவர்கள் மெல்ல மெல்ல சாவு வீட்டுக்கு வந்துவிட்டுச் செல்பவர்கள் போல் சொல்லாமலேயே நழுவிவிட்டார்கள்.

நாலாபக்கமும் இருந்து வந்த ஈட்டித் தாக்குதல்களைத் தாங்க இயலாத நிலையில் ஒரு நாள் மாடிப் படியிலிருந்து கீழே விழுந்தார்.

நன்றிகொன்றவன் போல இயற்கையும் அவரது மூச்சைப் பறித்துக்கொண்டது. ஆளரவமே இல்லாத தீவில் தன்னந்தனியாக விடப்பட்டவள் போலானேன்.

மகிழம்பூ சருகானாலும் மணம் குறையாததுபோல வாழ்ந்து சலித்த குடும்பம், எந்தத் தேவையையும் எவரிடமும் கேட்டுப் பெறப் பழைய நிலைமை வேலியாக இருந்தது.

இந்த நிலையில் எனது கல்வி சம்பந்தமான சான்றிதழ்களை எடுத்துக்கொண்டு ஊர் தந்த "வாழாவெட்டி'' என்ற ஞானஸ்நானத்தையும் ஏற்றுக்கொண்டு இங்கே வந்தேன். விவரம் தெரியாத நாட்களிலேயே தாயை இழந்த என்மீது தாயினும் சாலப் பரிந்து அன்பு கட்டினீர்கள்.

தந்தையை இழந்த நான் தங்களைத் தந்தையின் உருவில்வைத்துக் கொண்டாடினேன்.

தமிழரசனுக்கும், எனக்கும் எத்தகைய உடலுறவும் இல்லை. உள்ளத்தால் நாங்களிருவரும் உடன் பிறப்புக்களாகவே விளங்கினோம். காலம் எங்களிருவரையும் ஒரு தாயின் வயிற்றில் முன்னும் பின்னும் பிறந்த உடன்பிறப்புகளாகவே மாற்றிவிட்டது. கடந்த காலத்தில் நான் பெற்ற கசப்பான அனுபவங்களினால், வெயிலோ, மழையோ, வாடையோ, தென்றலோ எது தன்னைத் தீண்டினாலும் தோற்றத்தையோ, இயல்பையோ மாற்றிக் கொள்ளாத பட்டமரம்போலானேன் நான். அங்ஙனமிருக்க என் உள்ளத்தில் காதலா சுரக்கும்?

துணையின்றிப் பெண்கள்வாழ்கிற அளவுக்கு நாகரிகம் இங்கே வளர்ந்துவிடவில்லை. எனவே துணை இருந்தும் இல்லாத நிலையிலிருக்கும் நான், குஞ்சுப் பருவத்தில் குயிலுக்கும் வாத்துக்கும் கொஞ்ச நாள் தாயாக, கோழியும், காகமும் இருப்பதைப்போல அல்லாமல், தமிழரசனை என் உடன் பிறந்த தம்பியாகவே வரித்துக்கொண்டேன்.

என்னையும், அவனையும் இணைத்து இந்தச் சமுகம் எது வேண்டுமானாலும் சொல்லட்டும். கவலை இல்லை. நாங்கள் எங்கிருந்தாலும், காடு செல்லும்வரை, கல்லறையை எங்கள் உடல்கள் முத்தமிடும்வரை அக்கா, தம்பி என்ற உறவுக்கு உதாரண சீலர்களாகவே விளங்குவோம். மனதைத் திறந்து காட்டிவிட்டேன்.

எனது நெஞ்சத் தூய்மைக்கு மாசு கற்பிக்காதீர்கள். எனது நாமுறுக்கில், இரத்த நாளத்திலே சந்தேகம் வைக்காதீர்கள்.

இங்ஙனம் தங்கள் மகள்,

மணிமேகலை.

கடிதத்தைப் படித்து முடிந்ததும் பெரியதம்பி வேட்டித் தலைப்பால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு பெருமூச்செறிந்தார்.

யாரோ தன்னைக் கொதிக்கின்ற எண்ணெய்க் கொப்பரையில் பிடித்துத் தள்ளுவதுபோல அவருக்குத் தோன்றியது. அடுத்த சணம் அவரால் அங்குஅமர்ந்திருக்க முடியவில்லை. கடிதத்தைச் சுருட்டி எடுத்துக்கொண்டுஅறைக்குள்ளேபோய் தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டார்.

அவர் வாழ்நாளில் சந்தித்த இந்த அனுபவம் பசுமையாக அவர் கண்ணெதிரே தோன்றியது. அவருக்கு எதிரே இருந்த நிலைக்கண்ணாடியில் தோன்றிய அவரது மாயப்பிம்பம் அவரைக்கண்டு கெக்கலிசெய்தது. "மகிழம் பூ சருகானாலும் மணம் குன்ருது'' என்று அவரது உதடுகள் முணுமுணுத்தன.

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.